விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# வலம்புரி
VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 20 செவ்வாய்க்கிழமை (04.03.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 75

## அரசுக்கு எதிரான எதிரணி உருவாகிறது

# ஸ்ரீ.சு.கட்சியும்-ஜே.வி.பியும் கூட்டிணைவதில் இணக்கம்!

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(நமது நிருபர்)

**ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் பொது வேலைத் திட்டமொன்றின் கீழ் இணைவதற்கு இணக்கம் காணப்பட்டிருப்பதாகவும், இது தொடர்பான புரிந்துணர்வு உடன் படிக்கை ஒன்றில் சுதந்திரக் கட்சித் தலைவர்களும் ஜே.வி.பி தலைவர்களும் விரைவில் கைச்சாத்திடவுள்ளதாகவும் இது காலத்தின் தேவையாக உள்ளதென எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவியேற்று 14 மாதங்களைக் கடந்த நிலையில் தேர்தல் கால வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றாமல் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மக்கள் விளங்கிக் கொள்ள முடியாத சமாதான முன்னெடுப்புக்கள ஆகியவற்றிற்கு எதிராக பலமான எதிரணி ஒன்றை அமைக்கும் நோக்கில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் பொது வேலைத்திட்டதின் கீழ் இணைவதற்கு இணக்கம் கண்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பயும் இணைவது தொடர்பாக இரு கட்சித் தலைவர்களும் ஏற்கனவே பல சுற்றுப் பேச்சு வார்த்தைகளை நடத்தியிருந்தனர்.

இவ்விரு கட்சியும் இணைவது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானம் சம்மந்தமாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜ பக்ஷ தெரிவிக்கையில்;

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி,ஜே.வி.பியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்வதற்கான

(10ம் பக்கம் பார்க்க)

## வீதி விபத்தில் இளம் பெண் பலி

(கிளிநொச்சி)

ஏ-9 கண்டி வீதி கிளிநொச்சி நகரப்பகுதியில் இடம்பெற்ற வீதி விபததொன்றில் இளம் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முற்பகல் இடம் பெற்ற இவ்விபத்தில் கிளிநொச்சி மூன்றாம் வாய்க்காலைச் சேர்ந்த கருணாகரன் கல்பனா வயது 20 என்பவரே இவ்வாறு பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## சதீஸ் நம்பியாருடன் பிரதமர் ரணில் சந்திப்பு

### அறிக்கை கையளிப்பதில் தாமதம்

(கொழும்பு)

இந்தியாவிற்குச்சென்றுள்ள ரணில் விக்கிரமசிங்காவும் அமைச்சர் மிலிந்த மொறகொடவும் இந்தியா முன்னாள் இராணுவத் தளபதி சதீஸ் நம்பியாரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பில் சதீஸ் நம்பியாரினால் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கையின் உள்ளடங்கலைக் கேட்டறிந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான அறிக்கை அமைச்சர் மிலிந்த மொறகொடவிடமும் சமர்ப்பிக்கப்படவில்லைஎனவும்,எதிர்வரும் 18ம் திகதி யப்பான் தலை நகர் டோக்கியோவில் நடை பெறவுள்ள அரசு-புலிகள் பேச்சுவார்த்தைக்கு முன்பதாக அரசாங்கத்திடம் உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமான அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(த)

### உலக வங்கியின் யாழ்.விஜயம் ரத்து

இன்று யாழப்பாணம் வருகை தர இருந்த உலக வங்கிக்குழுவின் விஜயம் பிற்போடப்பட்டுள்ளது.

யாழ்.செயலகத்தில் உலக வங்கிக் குழுவினர் கலந்து கொள்ளவிருந்த கூட்டமும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்துள்ளார்.(த)

## இலங்கை,தென்னாபிரிக்கா போட்டி சமநிலையில் முடிவடைந்தது

இலங்கைக்கும் தென்னாபிரிக்காவிற்குமிடையே நேற்று நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி மழையின் காரணமாக இடை நிறுத்தப்பட்டு இரண்டு அணிகளுக்கும் தலா 2 புள்ளிகள் வழங்கப்பட்டன.

முதலில் துடுப்பொடுத்தாடிய இலங்கைஅணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 268 ஓட்டங்களை பெற்றது. இதில் அத்துபத்து 124 ஓட்டங்களையும் அரவிந்த டி சில்வா 73 ஓட்டங்களையும் பெற்றனர்.பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி 45 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 229 ஓட்டங்களைப் பெற்ற வேளை போட்டி இடைநிறுத்தப்பட்டு இரண்டு அணிகளிற்கும தலா 2 புள்ளிகள் வழங்கப்பட்டன. தென்னாபிரிக்கா சார்பில் கிப்ஸ் 73 ஓட்டங்களைப்பெற்றார்.

## நாட்டில் நிரந்தர சமாதானம் வேண்டி தவக்காலத்தில் பிரார்த்திப்போம்

### யாழ்.ஆயர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

உலக சமாதானத்திற்காக நாளை பிரார்த்தனையில் ஈடுபடுமாறு யாழ். ஆயர் அதி வணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாளை தவக்காலம் ஆரம்பமாவதை ஒட்டி அவர் விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, போரின் கார் மேகங்கள் உலக சமாதானத்ததை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன ஈராக் மத்திய கிழக்குப் பகுதியல் போர் வெடிக்கும் அபாயம் தோன்றியுள்ள வேளையில் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தின் முதல் தினமான நாளை திருநீற்றுப் புதனை நோன்பு செப-தவ தினமாக அனுசரிக்கும் படி பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதனையிட்டு, உலக சமாதானத்திற்காகவும்,எமது மண்ணின் அமைதிக்காவும நோன்பிலும் செபத்திலும் ஈடுபடவேண்டும்.

மக்கள் அனைவரும் அமைதியும் சமாதானமும் நிறைந்த எதிர்காலத்தைப் பெற்று வாழ மரியன்னையிடம் வரம் வேண்டுவோம் என்றும் யாழ்ஆயர் குறிப்பிட்டுள்ளார்(இ).

# தலைவர்பிரபா-பாலா நேற்றும் சந்தித்தனர்!

## முக்கிய விடயங்கள் ஆராய்வு

(கிளிநொச்சி)

டோக்கியோவில் நடை பெறவுள்ள 6வது சுற்று சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் திருமதி அடேல் பாலசிங்கமும் இரண்டாவது நாளாக நேற்றும் மந்திராலோசனை நடத்தியுள்ளனர்.இம் மந்திர ஆலோசனையின் போது யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் நிறைவேற்றப்படாத முக்கிய அம்சங்கள் தொடர்பாகவும் சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும். தலைவர் பிரபாகரனுக்கு விளக்கிக் கூறியுள்ளனர்.

இதன் போது தலைவர் பிரபாகரன் யுத்த நிறுத்த உடன்படிக்கையன் பிரகாரம் நிறைவேற்றப்படாத முக்கிய அம்சங்கள் குறித்தும் யுத்த நிறுத்த நிலை தொடர்பாகவும் இவற்றுக்கு விரைவில் தீர்வு காணும்படி 6ம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது வலியுறுத்திக் கூறுமாறும் அன்ரன் பாலசிங்கத்திடம் கூறியுள்ளார்.

இதேவேளை இவ்வாரம் நடைபெறவுள்ள இராஜதந்திரிகளுடனான சந்திப்புக் குறித்தும் இருவரும் நீண்ட நேரம் மந்திராலோசனை நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## திருமலையின் அபிவிருத்தி பற்றி யப்பான் தூதுக்குழு ஆராய்வு

(திருகோணமலை)

யப்பான் நாட்டின் பொது அமைப்புக்களைச் சேர்ந்த ஜாபி தலைமையிலான ஏழு அதிகாரிகளைக் கொண்ட நிபுணர் குழுவொன்று திருகோணமலை மாவட்டத்தின் தேவைகளை ஆராய்வதற்கு நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்தது.

திருகோணமலை மாவட்டத்தின் தேவைகளைக் கண்டறியும் பொருட்டு திருகோணமலை வந்த இக் குழுவினர் வடக்குக் கிழக்கு மாகாண சபைகளின் பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன்,மாகாண சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி குமாரவேற்பிள்ளை உட்பட அரச அதிகாரிகள் மற்றும் மாகாண அமைச்சின் அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

மாகாண சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற இக் கலந்துரையாடலின் போது திருகோணமலைமாவட்டத்தின் குடிநீர்த் தேவை,வடிகால அமைப்பு வசதிகள் மலசல கூட வசதிகள் தொடர்பாக ஆராயப்பட்டன. (வ)

## கண்காணிப்புக் குழுவினரை பிரபா நாளை சந்திப்பார்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிக்ஷனையும்,கண்காணிப்புக் குழுத்தலைவர் பதவியில் இருந்து விலகிச் செல்லும் மேஜர் ஜெனரல் ரொண்பியுறுஹெவ்டேயையும் நாளை புதன் கிழமை வன்னியில் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்துவுள்ளார்.

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவரையும், பழைய தலைவரையும் விடுதலைப் புலிகளின் தலைவர் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தும் போது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர்

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகள் சுமத்தும் குற்றச்சாட்டில் உண்மை இருக்கவே செய்கிறது

### பிரதமர் ரணில் இந்தியாவில் தெரிவிப்பு

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளை நம்பமுடியுமா என்பது தற்போதைய பிரச்சினை அல்ல.அரசு-புலிகளுக்கு கிடையே புரிந்துணர்வைக் கட்டி வளர்ப்பதே மிக முக்கிய சவாலாக உள்ளது.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார். மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயமாக இந்தியா சென்றுள்ள பிரதமர் அங்கு "இந்தியா ருடே" சஞ்சிகையன் ஏற்பாட்டில் நடை பெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;


தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும சமாதான முயற்சிகளின் பயன்களை வட பகுதி மக்கள் முழுமையாக அனுபவிக்கவில்லை என்று விடுதலைப் புலிகள் சுமத்திவரும் குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்கவே செய்கிறது.

சமாதான முயற்சியின் பயன்களை அனைத்து மக்களும் அனுபவிப்பதற்கு நிரந்தர சமாதானம் அடையப்பட வேணடும் இதனைச் சாதித்து

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



# CRICKET WORLD CUP 2003




# பாகிஸ்தானைத் தோற்கடித்ததன் மூலம் எமது திறமை மீண்டும் நிரூபிக்கப்பட்டது

## அணித் தலைவர் கங்குலி பெருமிதம்

உலகக்கிண்ணச் சுற்றுப்போட்டியில் பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் இந்திய அணி 6இலக்குகளால் வெற்றி அடைந்ததன் மூலம் எமது நாட்டின் பெருமை காப்பாற்றப்பட்டுள்ளதென இந்திய அணித் தலைவர் செவ்ரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், உண்மையில் இது ஒரு முக்கியத்துவம் பெற்ற ஆட்டமாகும். குறிப்பாக இரு அணிகளுககும்மட்டுமல்லாது, இரு நாட்டு மக்களுக்குமான மோதலாக இவ்வாட்டம் கருதப்பட்டது.

இதில் நாம் வெற்றியீட்டியதன் மூலம் மீண்டும் ஒரு முறை நம் நாட்டின் பெருமையை கட்டிக் காத்துள்ளோம்.

பாகிஸ்தான் அணி சிறந்த மொத்த ஓட்ட எண்ணிக்கையை பெற்றிருந்தது. ஆயினும் எமது வீரர்கள் மனஉறுதியுடன் துடுப்பெடுத்தாடி தமது திறமையை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளனர். நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் மிக லாவகமாக தனக்கே உரிய பாணியில் 75 பந்துகளை மட்டும் எதிர்கொண்டு 98 ஓட்டங்களைக் குவித்து அணியின் வெற்றிக்கு வழிசமைத்துள்ளார். இளம் வீரரான யுவராஜ்சிங் மற்றும் அணியின் உப தலைவர் ட்ராவிட் ஆகியோர் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றனர் என்றார்.

ஆட்ட நாயகன் சச்சின் கருத்துக் கூறுகையில், பாகிஸ்தானுடன் ஆடுகின்ற ஒவ்வொரு ஆட்டமும், எமக்கு முக்கியமானதே..

உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டிகளில் நான்காவது முறையாகவும் பாகிஸ்தானை வெற்றியீட்டியுள்ளோம். அணிவீரர்கள் அனைவரையும் பாராட்டுவதோடு, சிறப்பாக இக்கட்டான நேரங்களில் அணிக்குக் கைகொடுக்கும் இளம்நாயகன் யுவராஜ் மற்றும் சிரேஷ்ட வீரர் ராகுல் ராவிட் ஆகியோருக்கு எனது தனிப்பட்ட பாராட்டுதல்களைத் தெரிவிக்கின்றேன் என்றார். (த-55)



நேற்றைய ஆட்டத்தின் போது மார்வன் அத்தபத்து....

## ஓய்வு பெறுகிறார் றொலாண்ட்

நெதர்லாந்து கிறிக்கெற் அணித தலைவர் றொலாண்ட் லிபெவ்ரி, தான் கிறிக்கெற் உலகல் இருந்து ஓய்வு பெறப் போவதாக பகிரங்கமாக அறிவித்துள்ளார். நேற்றைய நமீபிய அணியுடனான ஆட்டத்தில் அவர் பங்குபற்றவில்லை.

தனது உடல்நிலை கிறிக்கெற் ஆடுவதற்கு இடம் அளிக்கவில்லை எனவும் நாட்டுப் பற்று காரணமாகவே அணித் தலைமையை ஏற்று உலகக் கிண்ணப் போட்டிகளில் அணியை வழிநடத்தியதாகவும் கூறினார். ஆயினும் தனக்கு ஏற்பட்ட காயம் காரணமாக தொடர்ந்து ஆட முடியாதிருப்பதாகவும், அதனால் கிறக்கெற் அணியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்வதாகவும் கூறியுள்ளார். (த-55)

## இன்றைய ஆட்டங்கள்

**மேற்கிந்தியத்தீவு**
**எதிர்**
**கென்யா**
(கிம்பர்லி)
**2.00 P.M**

**சிம்பாவே**
**எதிர்**
**பாகிஸ்தான்**
(புலவேயோ)
**2.00 P.M**

2003 CRICKET WORLD CUP

## உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2003

### நியுசிலாந்து எதிர் கனடா

**கனடா**

47 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| மராஜ் | lBW | b பொண்ட் | 0 | (14) |
| டெவிசன் | c கைம்ஸ் | b ஹரிஸ் | 75 | (62) |
| இபில் | c மைக்கலம் | b ஓரம் | 7 | (15) |
| பீல்கிலிவ் | c பிளமிங் | b ஸ்ரைரிஸ் | 8 | (24) |
| டிகுருற் | lbw | b ஓரம் | 17 | (49) |
| ஹரிஸ் | c மக்கலம் | b பொண்ட் | 26 | (39) |
| பாகை | b ஓரம் | - | 1 | (2) |
| சாமட் | lbw | b பொண்ட் | 12 | (20) |
| கொட்ரின் ரான் | b ஓரம் | | 7 | (17) |
| பட்டேல் | b ஸ்ரைரிஸ் | - | 25 | (29) |
| சீபரன் | not out | - | 4 | (12) |

உதிரிகள் 14

### பந்து வீச்சு -நியுசிலாந்து

| | | | |
|---|---|---|---|
| பொண்ட் | 10 | 29 | 3 |
| அடம்ஷ் | 6 | 38 | 6 |
| ஓரம் | 10 | 52 | 4 |
| வெட்டோரி | 10 | 34 | 0 |
| ஸ்டைரீஸ் | 4 | 23 | 2 |
| ஹரிஸ் | 7 | 19 | 1 |

**நியுசிலாந்து**

23ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 197 ஓட்டங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| மக்கலம் | c பாகை | b டெவிசன் | 14 | (13) |
| பிளமிங் | run out | - | 5 | (2) |
| அஸ்ரில் | பாகை | b டெவிசன் | 11 | (08) |
| ஹைம்ஸ் | மராஜ் | b டெவிசன் | 31 | (28) |
| அடம்ஸ் | c சப் | b சீபரன் | 36 | (20) |
| ஸ்ரைரிஸ் | Not out | --- | 54 | (38) |
| ஹரிஸ் | Not out | - | 38 | (29) |

உதிரிகள் -08

### பந்து வீச்சு - கனடா

| | | | |
|---|---|---|---|
| பட்டேல் | 3 | 32 | 0 |
| டெவின்சன் | 10 | 61 | 3 |
| கொறரின்ரொான் | 2 | 33 | 0 |
| சீபரன் | 7 | 61 | 1 |
| இபில் | 01 | 7 | 0 |

# நமீபியாவுடனான ஆட்டத்தில் நெதர்லாந்து அணி வெற்றி

உலகக்கிண்ணக் கிரிக்கெற் போட்டியில் நேற்று நெதர்லாந்திற்கும் நமீபியாவிற்கும் இடையிலான போட்டியில் நெதர்லாந்து அணி 64 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டு இழப்பிற்கு 314 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் லொபென் பார்க் 121 ஓட்டங்களையும் நூர்றவஜ் ஆட்டமிழக்காமல் 134 ஓட்டங்களையும் பெற்றனர்

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நமீபியா அணி 46.5 ஓவர்கள் முடிவில் அனைத்து வ ி க ெ க ட டுக்களையும்இழந்தது. இதில் வெலட்டர் மற்றும் மார்க் ரொயட் ஆகியோர் தலா 52 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் லொபென்பார்க் மற்றும் ராஜா ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்துடன் இணைந்து
**வலம்புரி**
நடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப்போட்டி

**போட்டியில் பங்கு பற்றுங்கள் பெறுமதியான பரிசை வெற்றி கொள்ளுங்கள்**

1) இம்முறை உலகக்கிண்ணத்தை வெல்லும் அணி எது?

2) இப் போட்டியின் சகலதுறை ஆட்டக்காரர் யார்?

உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி
கிரிக்கெற் பரிசுப் போட்டி
**வலம்புரி**
இல 15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003

முழுப்பெயர் : ..................................
முகவரி : ..................................
..................................
தே.அ.அ.இல : ..................................
கையொப்பம்: ..................................

அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி
மார்ச் 15, 2003

# பாதுகாப்பு வலய விவகாரத்திற்கு விரைந்து தீர்வு காண வேண்டும்

## இடம்பெயர்ந்த மக்களின் மனிதாபிமானப் பிரச்சினை இது என்கிறார் கல்விமான் ஜயந்த செனிவிரத்ன

(கொழும்பு)

**துறைமுகம், விமான நிலையம் ஆகியவை அமைந்துள்ள இடங்கள் அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பில் அந்தப் பக்கத்தில் இராணுவத் தரப்பின் விவாதமும் நியாயமாகத்தான் படுகிறது.**

**அதேபோல் பொதுமக்களின் தாயகபூமி இது. இவர்கள் நீண்ட காலமாகத் தமது சொந்த மண்ணை விட்டு அகதி முகாம்களில் அல்லற்படுகின்றனர்.**

**சமாதான முன்னெடுப்பின் ஆரம்பத்திலேயே தங்களது வீடுகளுக்குச் செல்ல வேண்டும் எனக் கோருவதும் மனிதாபிமான விடயம் தான். எனவே கூடிய விரைவில் அவர்களது மனிதாபிமானப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும்.**

நாட்டில் நிரந்தர சமாதானம் நிலவ வேண்டியதன் அவசியத்தை காலத்துக்குக் காலம் தனது கருத்துக்கள் மூலம் உணர்த்தி வருப வரும் களனி பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான ஜயந்த செனிவிரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துக் கூறுகையில்,

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புத் தொடர்பாக அரசு உரிய நடவடிக்கை எடுக்காவிடின் சமாதான விரோதிகள் இதனைத் துரும்பாக வைத்துக் கொண்டு ஆர்ப்பாட்டங்களை நடத்தக்கூடும். இதன் தாக்கம் சமாதான முன்னெடுப்பிலும் விழுக்காட்டை ஏற்படுத்தலாம்.

அண்மையில் மக்கள் விடுதலை முன்னணி நடத்திய ஆர்ப்பாட்டத்திற்கான காரணமாக பொருள் விலை உயர்வே கூறப்பட்ட போதிலும் இவ் ஆர்ப்பாட்டம் இறுதியில் சமாதான எதிர்ப்பு கோஷங்களுடன் நிறைவு பெற்றதை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும்.

சமாதான விரோத சக்திகளுக்கு சதகமாகக் கூடிய இவ்விடயங்கள் தொடர்பில் அரசு கூடிய கவனம் செலுத்த வேண்டும்.


இனவாதிகள் விதைக்கும் ஐயப்பாடுகளை முழு இன சமூகத்தில் இருந்தும் களைய நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று உலகில் மிகவும் சக்தி வாய்ந்ததாக பெடரல் முறை விளங்குகின்றது.

உலகிலுள்ள பலம் வாய்ந்த நாடுகளில் நூற்றுக்கு எண்பது சதவீதமான நாடுகளில் இருப்பது சமஷ்டி முறையாகும்.

இது தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டவேண்டும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முரணான செயல்களும் இரு தரப்பிலும் இடையிடையே நிகழத்தான செய்கின்றன.

சமாதான விரும்பிகள் பலர் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள்ளும் இருக்கின்றனர். மிக முக்கியமாக ஜனாதிபதியும் நிலையான கொள்கையுடன் இருக்கின்றார்.



அவர் சுதந்திரதின விழாவில் ஆற்றிய உரையில் நிரந்தரத் தீர்வின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார். (உ)

வடமராட்சி வலய

## சிறுவர் திறன் விருத்திப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு நிதியம் யாழ். மாவட்டத்தில் பாடசாலை மட்டத்தில் நடத்திய சிறுவர் திறன் விருத்திப் போட்டியின் வடமராட்சி வலய மட்ட முடிவுகள் வருமாறு,

### கட்டுரைப் போட்டி

**(மேற்பிரிவு)**

1ஆம் இடம்:- தே.அர்ச்சனா-யா/வட இந்து மகளிர் கல்லூரி
2ஆம் இடம்:- த.விஜிதா-யா/வடமத்திய மகளிர் கல்லூரி
3ஆம் இடம்:- ம.இன்பரூபி-யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

**(மத்தியபிரிவு)**

1ஆம் இடம்:-த.ஆரண்யா- யா/நெல்லியடி ம.ம.வித்தியாலயம்.
2ஆம் இடம்:-ஈ.கௌரிஷா-யா/மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை.
3ஆம் இடம்:-த.தமிழினி யா/மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை

### கவியரங்கம்~தனி

**(மேற்பிரிவு)**

1ஆம் இடம்:-இ.அரவிந்தன்-யா/நெல்லியடி ம.ம.வித்தியாலயம்
2ஆம் இடம்:-சி.திருச்செந்தூரன்-யா/நெல்லியடி ம.ம.வித்தியாலயம்
3ஆம் இடம்:-செ.பிரதீபா-யா/விக்னேஸ்வராக் கல்லூரி

### கவியரங்கம் குழு

**(மேற்பிரிவு)**

1ஆம் இடம்:-யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

### கவியரங்கம் தனி

**(மத்தியபிரிவு)**

1ஆம் இடம்:-செ.ஞானமாதங்கி-யா/விக்னேஸ்வராக் கல்லூரி
2ஆம் இடம்:-சி.கார்த்தி ஆனன்-யா/இமையாணன் அ.த.க.பாடசாலை
3ஆம் இடம்:-த.பிரியந்தி-யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்

### கவியரங்கம் குழு

**(மத்தியபிரிவு)**

1ஆம் இடம்:-யா/வட இந்து மகளிர் கல்லூரி
2ஆம் இடம்:-யா/வடமராட்சி மகளிர் கல்லூரி
3ஆம் இடம்:-யா/துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்

### கவியரங்கம் தனி

**(கீழ்ப்பிரிவு)**

1ஆம் இடம்:-நி.சாமந்தி-யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
2ஆம் இடம்:-சி.ஜீவந்திகா-யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
3ஆம் இடம்:-செ.நர்த்தனா-யா/கொற்றாவத்தை அ.த.க. பாடசாலை

### கவியரங்கம்~குழு

**(கீழ்ப்பிரிவு)**

1ஆம் இடம்:-யா/கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி
2ஆம் இடம்:-யா/கரவெட்டி ஸ்ரீநாரதா வித்தியாலயம்

### பேச்சுப் போட்டி

**(கீழ்ப்பிரிவு)**

1ஆம் இடம்:-பு.ஆரணி-யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
2ஆம் இடம்:-சி.ஷாகித்தியா-யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
3ஆம் இடம்:-செ.நளினா-யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை.

## கொடியேற்றம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கிழக்கு ஆலவாகனப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

ஆலய தேர், பூங்காவன உற்சவங்கள் முறையே இம்மாதம் 18 ஆம் 19 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. (உ-117)

## வள்ளியம்மன் ஆலயத்தில் சிவராத்திரி விழா

(தனங்கிளப்பு)

உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மறவன்புலோ மத்தி கிராமத்தில் அமைந்துள்ள வள்ளியம்மன் ஆலயத்தில் சிவராத்திரி நிகழ்வுகளை மேற்கொள்ள படைத்தரப்பு அனுமதியளித்ததை அடுத்து பெருந்திரளான அப்பகுதி மக்கள் வள்ளியம்மன் ஆலயத்தினை தரிசித்தனர்.

இதுவரை காலமும் அப்பகுதிக்கு மக்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லையாயினும் சிறிது காலமாக அவ் ஆலயத்தில் பூஜைகள் மேற்கொள்ள படைத்தரப்பு அனுமதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-37)

## தேசிய விளையாட்டு விழா போட்டிகள் சில கொழும்பில்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம், தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இறகுப் பந்து, ஹொக்கி, நீச்சல் ஆகிய போட்டிகளை கொழும்பில் நடத்த ஏற்பாடாகியி ருக்கின்றது.

மேற்படி போட்டிகளை நடத்துவதற்கு வேண்டிய உள்ளக, வெளியக மைதானங்கள் மற்றும் நீச்சல் தடாகம் என்பன இல்லாத காரணத்தினாலேயே இவ்வாறு சில போட்டிகள் கொழும்பில் நடத்தப்படவுள்ளதாக விளையாட்டு விழா தொடர்பான முன்னோடி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மெய்வன்மைப் போட்டிகள் துரையப்பா விளையாட்டரங்கிலும், கூடைப்பந்தாட்டம் (ஆண்கள் பிரிவு) கிரிக்கெட் (ஆண், பெண்) ஆகியன சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்திலும், கூடைப் பந்தாட்டம் (பெண்கள் பிரிவு) வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையிலும் வலைப்பந்தாட்டம், கபடி (ஆண், பெண்), குத்துச்சண்டை ஆகியன யாழ். மத்திய கல்லூரியிலும் மேசைப்பந்தாட்டம் (ஆண், பெண்) உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் (ஆண், பெண்), மல்யுத்தம் ஆகிய போட்டிகள் சென். பற்றிக்ஸ் கல்லூரியிலும்,

எல்லே (ஆண்) வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும், எல்லே (பெண்) யாழ். இந்துக் கல்லூரியிலும், ஜூடோ போட்டி (ஆண்,பெண்) யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்திலும், கராட்டி (ஆண், பெண்) திருநெல்வேலி கலாமண்டபத்திலும் நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ-4)

எல்லைகள் கடந்த

## மருத்துவ அமைப்பின் சேவை இடைநிறுத்தம்

(கொழும்பு)


இலங்கையில் சேவையாற்றி வரும் எல்லைகள் கடந்த மருத்துவ அமைப்பு எதிர்வரும் யூலை மாதம் முதல் தனது சேவைகளை இடைநிறுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

இது குறித்து இலங்கை அரசிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையைக் கருத்திற் கொண்டே இவ் அமைப்பு தனது சேவையை இடைநிறுத்தவுள்ளது.

அத்துடன் மன்னார் மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் நடத்தி வந்த தமது சேவையினை ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி முதல் நிறுத்தவுள்ளதாகவும் அவ் அமைப்புத் தெரிவித்துள்ளது.

அவ்வமைப்பு வடக்கு-கிழக்கு பகுதியிலும் 5 வருட காலம் இச் சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (உ-10)



அரியாலை பண்ணிசை மன்றம் நடாத்திய தமிழ்விழா அண்மையில் நடைபெற்றது. விழாவை பிரதம விருந்தினர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களும், சிறப்பு விருந்தினர் செல்லன் கந்தையன் அவர்களும் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கின்றார்கள்.




அரியாலை பண்ணிசை மன்றம் நடத்திய தமிழ் விழாவில் சமய, சமூக, கலைப்பணிகளுக்கு தம்மை அர்ப்பணித்து வாழ்ந்து வருகின்ற தமிழறிஞர்களும், கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

# அமெரிக்காவுடன் சேர்ந்து ஈராக் மீது போர்தொடுக்க இஸ்ரேல் ஆயத்தம்

## பேட்ரியட் ஏவுகணைகள் குவிப்பு

(ஜெருசலேம்)

ஈராக் மீது அமெரிக்காவுடன் சேர்ந்து போர் தொடுப்பதற்கு இஸ்ரேல் தயாராகிவருகின்றது. அதற்காக டெல்அவிவ்,கைபா பகுதிகளில் அதி சக்திவாய்ந்த பேட்ரியாட் ஏவுகணைகளை இஸ்ரேல் குவித்து வருகின்றது. இந்த ஏவுகணை இயக்குவதற்காக இயக்குநர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் போர் எந்த நேரமும் மூளலாம் எனத் தெரிகிறது. இன்னும் சில நாட்களில் இந்த பேட்ரியாட் ஏவுகணை இஸ்ரேல் விமானப் படைத் தளங்களில் இருந்து கொண்டு வரப்பட்டுவிடும். இந்த ஏவுகணைகளை அமெரிக்காவிடமிருந்து இஸ்ரேல் பெற்றுள்ளது. போருக்கு அமெரிக்காவிற்கு உதவுவதற்காக இதை குவித்து வருகிறது. ஜெர்மனியில் இருந்து வாங்கப்பட்ட 2ஏவுகணைகளையும் பேட்ரியாட் ஏவுகணையுடன் கைபா மற்றும் டிமோனா பகுதியில் தற்காலிகமாக இஸ்ரேல் குவிக்கவுள்ளது.

இந்த போர் திட்டத்தையொட்டி கடந்த சில வாரங்களாக அமெ- இஸ்ரேல் இடையே உயர்மட்டப் பேச்சு நடந்து வந்ததாக அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஈராக்கை எப்படி நிராயுத பாணியாக்குவது என்பது குறித்து கடந்த வாரம் இஸ்ரேல் பிரதமர் ஷரோன் அதிபர் புஷ் சந்திப்பு நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (பி)

## ஈராக் ஆயுதக் களைவுக்கு மெக்ஸிகோ ஆதரவு

(மெக்ஸிகோ)

ஈராக்கில் நிபந்தனையற்ற ஆயுதக் களைவு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது குறித்து அமெரிக்காவுடன் நெருக்கமாகச் செயற்படுவதாக ஐ.நா பாதுகாப்புப் பேரவையின் உறுப்பு நாடான மெக்ஸிகோ தெரிவித்துள்ளது.

எனினும் ஈராக் மீது அமெரிக்கா தலைமையில் போர் நடத்தப்படுவதை அங்கீகரிப்பதா இல்லையா என்பது குறித்து மெக்ஸிகோ எதுவும் தெரிவிக்கவில்லை.

ஈராக் விவகாரத்திற்கு அமைதியான தீர்வு காணும் பொருட்டு குறிப்பாக அமெரிக்கா உட்பட ஏனைய நாட்டுத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருவதாக மெக்ஸிகோ ஜனாதிபதி வின்ஷன் பொக்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் சமாதான வழியில் தீர்க்கப்பட வேண்டுமேயானால் ஈராக் நிபந்தனையற்ற ஆயுதக் களைவை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் உயிர்களிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற உயிரி மற்றும் அந்திரெக்ஸ் ஆகியவற்றை அழித்து விட்டதாக ஐ.நா ஆயுதபபரிசோதகர்களிடம் ஈராக் நேற்று முன்தினம் கூறியுள்ளது.

இதன் காரணமாக ஈராக்கிற்கு எதிராக ஐ.நா 2வது தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட வேண்டும் என்ற அமெரிக்காவினதும் பிரிட்டனதும் கோரிக்கைகள் கேள்விக் குறியை எதிர் நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (பி-9)




## வெனிசுவேலா குண்டுத் தாக்குதல்களுக்கு எதிர்க் கட்சியினரே காரணம் ஜனாதிபதி ஷாவேஸ் குற்றச்சாட்டு

(கராகஸ்)

வெனிசுவேலாவின் எரிபொருள் நகரமான மராக்ஹெய்போவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் 3 கார்களும், வீடுகளும்,அலுவலகம் ஒன்றும் சேதமாக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற சில மணி நேரங்களில் வெனிசுவேலாவில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

வெனிசுவேலாவில் கடந்த ஒரு வாரத்தில் இடம்பெற்ற 3வது குண்டுத் தாக்குதல் சம்பவம் இது ஆகும்.

இதேவேளை, தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என எதிர்க் கட்சியினர் கோரிக்கை விடுத்து வரும் வேளையில் ஜனாதிபதி கியூகோ ஷாவிஸ் குண்டுத்தாக்குதலிற்கு எதிர்க்கட்சியினரே காரணம் என்றும் குற்றம் சாட்டியுள்ளார். (பி-9)

## காஸா அகதி முகாமில் இஸ்ரேலியர் தாக்குதல்

### 2பலஸ்தீனியர் கொலை 40 பேர் காயம்

(ரெல்அவிவ்)

காஸாப் பகுதியிலுள்ள அகதிகள் முகாம் நிலைகள் மீது இஸ்ரேலிய இராணுவம் நடத்திய படைநகர்வில் 2 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்ட துடன் 40 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இஸ்ரேலிய இராணுவத்தினர் டாங்கிகள் சகிதம அகதிமுகாம்களுக்குள் உட்புகுந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இராணுவத்தினரின் நகர்வுக்குப் பின்னணியில் காஸாநகரில் இஸ்ரேலிய இராணுவ ஊர்தி ஒன்று வெடி குண்டுடன் மோதிக் குண்டினை வெடிக்கச் செய்ததாகவும், இதனால் 2 இஸ்ரேலிய இராணுவத்தினர் காயமடைந்தனர் என்றும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை, இவ்வாறு குண்டு வெடிப்பினை மேற்கொணடது கமாஸ் குழுவின் அல் கதாம் பிரிவினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)

## ஹொங்ஹொங்கில் வெளிநாட்டுப் பணிப்பெண்களின் சம்பளத்தில் வெட்டு

(ப்ரஜாவில்)

ஹொங்ஹொங்கில் பணிபுரியும் வெளிநாட்டுப் பணிப் பெண்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் குறைந்தபட்ச சம்பளத்தை மேலும் குறைப்பதற்கு அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைக்கு பணிப் பெண்கள் வீதிகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

ஹொங்ஹொங்கில் 2 லட்சத்து 40 ஆயிரம் வெளிநாட்டுப் பணிப் பெண்கள் பணியாற்றுகின்றனர்.

இவர்களுக்கு ஆகக் குறைந்த சம்பளமாக 3 ஆயிரத்து 670 ஹொங் ஹொங் டொலர்கள் வழங்கப்படுகின்றது.

இதில் 400 டொலர்களைக் குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அத்துடன் வெளிநாட்டுப் பணிப்பெண்களை வேலைக்கமர்த்தியுள்ள தொழில் தருனர்களிடம் இருந்து மாதாந்தம் 400ஹொங் ஹொங் டொலர் வரியினை அறவிடப் போவதாக அரசாங்கம் கடந்த வாரம் அறிவித்திருந்தது.

இந்த வரி விதிப்புக்கும் தமது சம்பளம் குறைக்கப்படுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தே பணிப் பெண்கள் வீதிகளில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, தமது நடவடிக்கை உள்ளூர் பணிப்பெண்களை வேலைக் கமர்த்துதலை ஊக்கப்படுத்து மென்று அரசாங்கம் கூறுகின்றது. (பி-2)

## ஏவுகணை அழிப்பின் மூலம் ஈராக் ஒத்துழைப்பதை உலகுக்கு காட்டி விட்டது

(பக்தாத்)

தடை செய்யப்பட்ட அல்ஷமுத் ii ரக ஏவுகணைகளை ஈராக் அழிக்க ஆரம்பித்ததன் மூலம் ஐக்கிய நாடுகளுக்குத் தனது ஒத்துழைப்பை வழங்குவதை உலகுக்கு எடுத்துக் காட்டியுள்ளது.

எனினும் ஐக்கிய நாடுகளைப் புறக்கணித்து போர் முஸ்தீபில் அமெரிக்கா இறங்கினால் ஆயுத அழிப்பு நடவடிக்கைகளைக் கைவிடப் போவதாக ஈராக் கூறியுள்ளது.

ஐக்கிய நாடுகளுக்குப் புறம்பாக அமெரிக்கா செயற்படுமேயானால் தாம் ஏன் ஆயுத அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் விஞ்ஞானத்துறை ஆலோசகர் ஜெனரல் அமர்அல்ஷாமின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, ஈராக் யுத்தத்திற்காக தனது தளங்களை பயன்படுத்தும் அமெரிக்காவின் திட்டத்தினை துருக்கிப் பாராளுமன்றம் நிராகரித்துள்ளதுடன் பிரான்ஸ் உட்பட பல நாடுகள் போரைத் தவிர்க்குமாறு கோரிவருகின்றனர். (பி-2)

## பாக். அதிபர் கருத்துக்கு இந்தியா கடும் கண்டனம்

(புதுடில்லி)

காஷ்மீரில் வாழும் மக்கள் தமது சுதந்திரத்திற்காகப் போராடி வருகிறார்களென பாகிஸ்தானிய ஜனாதிபதி கூறிய கருத்துக்கு இந்தியா கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை மீண்டும் மீண்டும் காரணமாகக் கூறிவரும் இந்தியா, காஷ்மீர் மக்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதை உணர வேண்டுமென பாகிஸ்தானிய ஜனாதிபதி பர்வேஷ்முஷாரப் இந்தியத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்துக்குக் இந்திய மத்திய செய்தித் தொடர்பாளர் கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் எல்லைதாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் தூண்டி விடுவதை இதுவரையும் நிறுத்திக் கொள்ளவில்லையெனவும் இதனால் இந்தியா கோரியிருந்த 20 தீவிரவாதிகளையும் பாகிஸ்தான் ஒப்படைக்க மறுத்து விட்டது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியிருந்தார். (பி-2)

## போரினால் பிராந்தியம் பாதிக்கப்படும்

(தெஹ்ரான்)

ஈராக் மீதான அமெரிக்க யுத்தம் அப்பிராந்தியத்தில் ஸ்திரமற்ற தன்மையை உருவாக்குமென்று ஈரானிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈராக்கில் ஆயுதக்களைவை மேற்கொள்ள ஐக்கிய நாடுகளின் ஆயுத பரிசோதகர்களுக்கு மேலும் அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

யுத்தத்தை தவிர்ப்பதற்காக ஈராக் உட்பட அயல் நாடுகளினதும் ஐரோப்பிய நாடுகளினதும் ஆதரவை ஈரான் கோரும் என்று அவர் குறிப்பிட்டார். (பி-2)

## இந்தியப் பிரதமரை கொலை செய்ய தீவிரவாதிகள் திட்டம்

(புதுடில்லி)

இந்தியப்பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் துணைப்பிரதமர் எல்.கே. அத்வானி ஆகியோரைக் கொலை செய்ய லக்சரி தொய்பா அமைப்புத் திட்டம் வகுத்துள்ளது. இந்தப் பரபரப்பான செய்தியை பாகிஸ்தானின் வார இதழ் ஒன்று வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானின் மசூதி ஒன்றில் லக்சரி தொய்பா அமைப்பின் தலைவர் ஆற்றிய உரையினை ஒலிப்பதிவு செய்ததாகவும் அந்த உரையில் இந்தியாவில் தற்கொலைத் தாக்குதலை நடத்துமாறும் தமது அமைப்புக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அவ் வாரஇதழில் வெளியான செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (பி-2)

## இத்தாலியில் பொலிஸ்காரர் சுட்டுக்கொலை

(ரோம்)

இத்தாலியில் பயணிகள் தொடரூந்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒரு பொலிஸார் கொல்லப்பட்டதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

தொடரூந்தில் பயணம் செய்த நபர் ஒருவரிடம் பொலிஸார் அடையாள அட்டையைக் கேட்ட போது அதனைக் கொடுக்க மறுத்த சம்பந்தப்பட்ட நபர் தமது கைத்துப்பாக்கியால் பொலிஸாரை சுட்டுக் கொன்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்த துப்பாக்கி நபருடன் ஒரு பெண்ணும் பயணம் செய்துள்ளார் என்றும் இவர்கள் கெரில்லாக்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது. (பி-2)

## பாகிஸ்தானிலும் ஆர்ப்பாட்டம்

(இஸ்லாமபாத்)

அமெரிக்காவின் உத்தேச ஈராக் யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாகிஸ்தான் துறைமுக நகரமான கராச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் 70 ஆயிரம் பேர் கலந்து கொண்டுள்ளனர்.

ஆண்களுடன் பர்தா உடையில் பெண்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். (பி-2)

## கம்பியூட்டர் கோளாறு ஜப்.போக்குவரத்து பாதிப்பு

(டோக்கியோ)

கம்பியூட்டரில் ஏற்பட்ட கோளாறு காரணமாக ஜப்பானில் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதன் காரணமாக 20 ஆயிரம் பயணிகள் பாதிப்புக்குள்ளாயினர் என்று அதிகாரபூர்வத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஜப்பான் தலைநகர் டோக்கியோ விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு மைய கம்பியூட்டரில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நாட்டின் அனைத்து உள்நாட்டு விமானங்களும் தரையிறங்க வேண்டியதாயிற்று. இந்த மையத்தின் மூலம் நாட்டிலுள்ள 70 சதவீத விமானங்கள் இயங்குகின்றன. (பி)

## ஏவுகணைகளை ஈராக் அழித்தது

(பக்தாத்)

ஐ.நா சபை தடைவிதித்த ஏவுகணைகளில் முதல் கட்டமாக 4 ஏவுகணைகளை ஈராக் சனிக்கிழமை அழித்தது.

ஈராக் தலைநகர் பக்தாத்துக்கு 20 கி.மீ. தொலைவிலுள்ள இராணுவ வளாகத்தில் இப்பணிகள் நடைபெற்றன.

ஏவுகணைகளைத் தயாரிக்கப் பயன் படும் கருவிகள் ஞாயிற்றுக் கிழமை அளிக்கப்படும் என்று ஐ.நா ஆயுத சோதனை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக்கிலுள்ள பேரழிவு ஆயுதங்கள் அனைத்தும் அழிக்கப்பட வேண்டுமென அமெரிக்கா நிர்ப்பந்தம் செய்து வருகிறது. இதற்கு உடன்படாவிடில் ஈராக் மீது போர் தொடுக்கப் போவதாக அமெரிக்கா மிரட்டி வருகிறது. (பி)

# கொழும்பு மாநாட்டை கூட்டுறவு தலைவர்கள் புறக்கணித்தனர்

(தென்மராட்சி)

புனர்வாழ்வு, புனரமைப்பு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவினால் இன்று கொழும்பில் நடாத்தப்படவிருக்கும் குடாநாட்டு கூட்டுறவுத் தலைவர்களுக்கான மாநாட்டில் குடாநாட்டுத் தலைவர்கள் பங்குகொள்ளவதில்லை என முடிவு செய்துள்ளனர்.

குடாநாட்டிலுள்ள 24 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களை கொழும்பிலுள்ள அமைச்சு அலுவலகத்தில் இன்று நடைபெறவுள்ள மாநாட்டில் பங்குகொள்ளும்படி அழைப்புக்கள் அனுப்பப்பட்டிருந்தன.

ஆயினும், கூட்டுறவுத்தலைவர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் கூடி இது தொடர்பாக ஆராய்ந்த சமயம், போக்குவரத்து மற்றும் புறக்காரணிகள் நிமித்தம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள மாநாட்டில் பங்குகொள்வதில்லை என ஏகமனதாக முடிவு செய்து அமைச்சருக்கு தொலைநகல் மூலம் இது குறித்து செய்தி அனுப்பப்பட்டதாக சமாசத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இது இவ்விதமிருக்க, இக்குறித்த மாநாட்டினை கூட்டுறவுத்தலைவர்கள் மற்றும் கூட்டுறவு அதிகாரிகள் நன்மை கருதி யாழ்ப்பாணத்தில் நடாத்தும்படியும் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

## மறியலில் ஈடுபட்ட தொண்டர் ஆசிரியர்களை விரட்டிய பெண்பொலிஸார்

(கொழும்பு)

திருகோணமலையிலுள்ள மாகாணக்கல்வி அமைச்சு முன்னால் நேற்றுக் காலை நிரந்தர நியமனம் கோரி சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கும், பொலிஸாருக்குமிடையே முரண்பாடுகள் ஏற்பட்டது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, நேற்றுக் காலை ஆரம்பித்த இப்போராட்டத்தின் போது பெண் தொண்டர் ஆசிரியர்கள் மாகாணக் கல்வி அமைச்சு வாசலை மறித்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு வந்த பெண் பொலிஸார் இவர்களை அவ்விடத்தில் இருந்து விரட்டியுள்ளனர்.

அத்துடன், இப்போராட்டம் ஆரம்பமான வேளை தொண்டர் ஆசிரியர் சங்கப்பிரதிநிதி சந்திரகுமார் என்பவர் மாகாண அமைச்சு வாசல் கதவைத் திறக்க முற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எனினும் சில மணி நேரத்தின் பின் இவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இதனால் தொண்டர் ஆசிரியர்களின் இப்போராட்டம் மாகாணக் கல்வி அமைச்சு அலுவலகத்தை அண்டிய வீதி ஒன்றில் தற்போது நடைபெற்று வருகின்றது.

இப்போராட்டத்தில் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

மாகாணக் கல்வி அமைச்சு ஏற்கனவே பட்டியலிட்டதன் பிரகாரம் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கக் கோரியே இப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தங்கள் கோரிக்கை நிறைவேறும் வரை இப்போராட்டம் தொடரப்படும் என தொண்டர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (உ-8)

## உதைபந்தாட்டம் சமநிலையில் முடிவு

(சுண்டுக்குளி)

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை குளோபல் ரவலேஸ் அணிக்கும் யாழ். குருநகர் பாடுமன் அணிக்கும இடையில் உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

இரு அணிகளும் 1:1 என்ற கணக்கில் கோலைப் போட்டதால் உதைபந்தாட்டப்போட்டி சமநிலையில் முடிந்தது.

யாழ். உதைபந்தாட்டங்களின தலைவர் எஸ். கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இப்போட்டிக்கு நடுவர்களாக ஏ. ஆலைட், ஏ. சுரேன்திரன், ரி. தில்லைநாயகம் ஆகியோர் கடமையாற்றினர்.

இப்போட்டியை கப்ரின் டி.ஏ.எம். குணசிங்கம், எம். ஏ. சாந்தனின் அனுசரணையுடன் நெறிப்படுத்தினர். (உ-10)

## புதிய கட்டடம் திறப்பு

(தென்மராட்சி)

ஜீ.ரீ.சற் நிறுவனத்தின் 6 லட்சம் ரூபா நிதியுதவியுடன் மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு ஒரு புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடத்தினை தென்மராட்சி கோட்டக்கல்வி அதிகாரி நா. சத்தியநாதன் கடந்த வெள்ளியன்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

பாடசாலை அதிபர் க.வே. இராஜதுரை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதிக் கல்விப்பணிப்பாளர் கே.ஆர். டேவிட், டாக்டர் பே. பிலிப்ஸ், க. தவசிப்பிள்ளை, நா. அருளம்பலம், எம். சின்னையா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (உ-77)

## களுத்துறைக்கைதிகள் உண்ணாவிரதம் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆராய்வர்!

(கொழும்பு)

களுத்துறை தமிழ் அரசியல் கைதிகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சாகும்வரையிலான உண்ணாவிரதம் தொடர்பாகவும், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திப்பது தொடர்பாகவும் ஆராய்வதற்கு தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்கள் நாளை புதன்கிழமை கொழும்பில் கூடி ஆராயவுள்ளனர்.

இக்கூட்டத்தில் களுத்துறைச சிறைக்கைதிகள் விடுதலை தொடர்பாக தமிழ்க் கூட்டமைப்பினர் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து இக்கூட்டத்தில் முக்கியமாக ஆராயவுளனர் எனக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## பல்கலை மாணவர்களின் கல்விச் செலவைப் பொறுப்பேற்க விருப்பம்

(பருத்தித்துறை)

கனடாவில் வசிக்கும் யாழ்ப்பணத்தைச் சேர்ந்த நலன்விரும்பியொருவர் யாழ். மாவட்டத்தில் வன்செயல்களினால காலகளை இழந்த மூன்று மாணவர்களுக்கு செயற்கைக் கால்களை பொருத்துவதற்கும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் இரண்டு பல்கலைக்கழக மாணவர்களின் கல்விச் செலவைப்பொறுப்பேற்பதற்கும் விருப்பம் தெரிவித்துள்ளார்.

தற்போது கனடாவில் வசிக்கும யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வி. நடராஜா என்பவரே வறுமைக் கோட்டிற்குக் கீழ்வாழும் இம்மாணவர்களுக்கு கல்வி அபிவிருத்திமேம்பாட்டிற்கான நிதி உதவிகளை வழங்கவுள்ளார்.

பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும இரு மாணவர்களும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்களாகவும், செயற்கைக்கால்களை பொருத்த வேண்டியவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்களாகவும் 13 வயதிற்குக் கீழ் உள்ள மாணவர்களாகவும் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் உதவிகளை பெற்றுக்கொள்ள விரும்பும்மாணவர்கள் வைத்திய கலாநிதி எஸ். கதிரவேற்பிள்ளை, மாவட்டவைத்திய அதிகாரி, அரசினர் ஆதாரவைத்தியசாலை, பருத்தித்துறை என்னும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (உ-52)

## சகல வசதிகளுடனும் நீதி பரிபாலன கட்டடத்தொகுதி

(திருகோணமலை)

வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தும் நோக்குடன் சகல வசதிகளையும் கொண்ட நீதிபரிபாலன கட்டடத்தொகுதி ஒன்று திருகோணமலையில் அமைக்கப்படும் என்று பிரதம நீதியரசர் சரத்.என். சில்வா தெரிவித் துள்ளார்.

இந்நீதிமன்றக் கட்டடத்தொகுதியை அமைப்பதற்கு உலக வங்கி 3 கோடி 50இலட்சம் ரூபாவை வழங்கவுள்ளது.

மேல் நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் தொழில்சார் பிணக்குகளை தீர்க்கும் மூவர் சபை என்பன இக் கட்டடத்தொகுதியில் அடங்கும் (உ-8)

## வாக்காளர் இடாப்பு பிரதிகள் வழங்கல் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வாக்காளர் இடாப்பு பிரதிகள் வழங்கல் தற்காலிகமாக இடைநிறுததப்பட்டுளளதாக உதவித் தேர்தல ஆணையாளர் அறிவித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பு தயாரிப்பு வேலைகளை இம்மாதம் 28ஆம் திகதியுடன முடிவுறுத்த வேண்டி இருப்பதால் சகல அலுவலர்களையும் அப்பணியில ஈடுபடுத்துமாறும்,

வாக்காளர் இடாப்பு பிரதி வழங்குதலை தற்காலிகமாக இம்மாதம 5ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி வரை நிறுத்து மாறும் தேர்தல் ஆணையாளர் பணிப்புரை விடுத்திருப்பதற்கு அமைவாக வாக்காளர் இடாப்பு பிரதி பெறுவோரை ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதிக்குப் பின்பே தேர்தல அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு உதவித் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். (உ)

## வவுணதீவுத் தாக்குதலில் வீரச்சாவடைந்த போராளிகளின் ஞாபகார்த்தமாகப் போட்டிகள்

(கொழும்பு)

மட்டக்களப்பு வவுணதீவு இராணுவ முகாம் தாக்குதலின் போது உயிரிழந்த 103 போராளி களின் 6 ஆம் ஆண்டு நினைவுதினம எதிர்வரும் 6ஆம் திகதி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அனுஷ்டிக்கப்படவுளளது.

இதனை முன்னிட்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் படையணிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நேற்று முதல் தரவை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவருகின்றன. இறுதி நிகழ்வுகள் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டசிறப்புத்தளபதி கேணல் கருணா, விசேட தளபதி ப. ரமேஸ், மகளிர் படையணித்தளபதி நிலாவினி, தளபதிகளான ராம், ரொபேட் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-8)

## ஹொங்ஹொங் பேராசிரியர்கள் வருகை

(தென்மராட்சி)

முரண்பாட்டுக் கற்கைநெறிகளுக்கான போர்கோங் பவண்ரீடசன்ன நிறுவனத்தின் அனுசரணையுடன எதிாவரும் 7 ஆம்திகதி யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை மணடபத்தில் சுயநிர்ணய உரிமை பற்றிய சொற்பொழிவு இடம்பெறவுளளது.

ஹொங்ஹொங் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் யாஸஹாய் மற்றும் கலாநிதி ஹெலனாவால் ஆகியோர் இச்சொற்பொழிவுகளை நிகழ்த்தவுள்ளனர். (உ-77)

## கத்தி, கோடரிகள் அபேஸ்

(சுண்டுக்குளி)

மாநகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளி எனக் கூறி மக்களிடம் கத்தி, கோடரி என்பவற்றைப் பெற்றுக்கொண்டு தலைமறைவாகி விடும் நபர் குறித்து சுண்டுக்குளி, ஈச்சமோட்டைப் பகுதிகளில் பரவலாகப் பேசப்பட்டுவருகிறது.

சுத்திகரிப்புத் தொழிலாளிக்கான மேலாடையை அணிந்து செல்லும் மேற்படி நபர் வீடுகளுக்குச் சென்று அயலில் உள்ள பற்றைகளை வெட்ட கத்தி, கோடரி என்பவற்றை தருமாறு கேட்டுப் பெற்றுக் கொண்டு தலைமறைவாகிவிடுவதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை, இந்நபர் மாநகர சபையின முன்னாள் சுத்திகரிப்புப் பணியாளர் என தற்போது தெரியவந்துள்ளது. (உ-110)


## கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சக ஊழியர் திரு. ந. சதானந்தராசா

அவர்களின் அன்புத் தாயார்.

### அமரர் நடராசா பரமேஸ்வரி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஊழியர் நலன்புரிச் சங்கம்,*
*வலி. வடக்கு பிரதேச சபை,*
*காங்கேசன்துறை. மல்லாகம்.*

(C/5822)


## எழுத்தாளர் சபை

இளம்எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், இலைமறைகாயாக உள்ள எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும்நோக்கத்துடனும்,புதிய எழுத்தாளர்களை உருவாக்கும் எண்ணத்துடனும்

**வலம்புரி - சங்குநாதம்**

**தனது அடுத்த பணியாக ;**

**எழுத்தாளர் சபையை அமைக்கவுள்ளது. இதில் உறுப்பினர்களாகச் சேர விரும்பும் ஆர்வமுடையவர்கள்,தங்கள் விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.**

எழுத்தாளர் சபை
வலம்புரி
இல-15,வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

**உங்கள் விண்ணப்பத்துடன் பின்வரும் கூப்பனைத் தவறாது இணைத்து அனுப்பவும்.**

### வலம்புரி ~சங்குநாதம் எழுத்தாளர் சபை

அலுவலகப் பாவனைக்கு
அங்.இல :

முழுப்பெயர் :
தபால் முகவரி :
பிறந்த திகதி :
தே.அ.அ.இல :
புனைபெயர்(இருப்பின்):

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகள் ஒத்துழைப்பு ஒப்பந்தம்

## இலங்கை ~ இந்தியா கைச்சாத்து

(புதுடில்லி)

கடந்த சனிக்கிழமையன்று இலங்கை,இந்தியப் பிரதமர்கள் புதுடில்லியில் சந்தித்த பொழுது இரு நாடுகளுக்குமிடையிலான தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பசேவைகள் ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒப்பமிடப்பட்டுள்ளது.

இரு பிரதமர்களும் மதிய போசனத்தின் போது சமாதான நடவடிக்கைகள் உட்பட பல இரு தரப்பு விவகாரங்களையும் பேசியுள்ளனர்.

மேற்படி ஒப்பந்தத்தில் இலங்கை அமைச்சர் மிலிந்த மொறகொடவும், இந்தியாவின் வெளிநாட்டு முதலீடுகளுக்கு பொறுப்பான அமைச்சர் அருண்செளத்திரியும் ஒப்பமிட்டனர்.

'இந்தியருடே' ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்ட மகாநாடு நேற்று முன்தினத்துடன் முடிவடைந்தது. இறுதி நாள் மகா நாட்டில இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் உரையாற்றினார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான தரை வழிப்பாதை நிர்மாணிப்பு பற்றி இரு பிரதமர்களும் பேசியுள்ளதுடன் இதன் நிர்மாணிப்பை விரைவுபடுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

விமானப் போக்குவரத்து பற்றியும் இச் சந்தர்ப்பத்தில் உரையாடப்பட்டது.

விமானப் பறப்புகளை அதிகரிக்கும் தனது திட்டம் பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவை இந்தியப் பிரதமர் இச் சந்திப்பில் உறுதி செய்தார்.

இதன் பின்னர் இலங்கைப் பிரதமர் ஜனாதிபதி அப்துல்கலாமைச் சென்று சந்தித்தபோது, இலங்கை-இந்திய நாடுகளுக்கிடை யிலான தரை வழிப்பாதை நடை முறையில ஏற்படுத்தப்படவிருப்பதையிட்டு தான் மகிழ்ச்சியடைவதாக கலாம் அங்கு தெரிவித்துள்ளார். (உ)


## சிறுவிளம்பரம்

### தேவை

லொறி பொடி அடிப்பதற்கும் ரிங்கர் வேலை செய்வதற்கும ஆட்கள் தேவை.

**சிவலிங்கம் மோட்டோர்ஸ**

77. மானிப்பாய் றோட்,
யாழ்ப்பாணம். (6585)


## புனரமைப்பு

(கல்வயல்)

உடுப்பிட்டியில் அமைந்துள்ள மிகப் பழமையான கிறிஸ்தவ சேமக்காலை வடமராட்சி, தென்மேற்கு பிரதேச சபையினரால் புனரமைக்கப்பட்டுள்ளது. (உ-11)

# மரண தண்டனைச் சட்டமூலம் இம்மாதம் சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

மரணதண்டனையை மீண்டும் கொண்டு வருவது தொடர்பான சட்டமூலம் இம்மாத நடுப்பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்தச் சட்டமூலம் சம்பந்தமான விவாதம் முடிவடைந்ததும் அது தொடர்பாக சகல விபரங்களும் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப் படவுள்ளன.

இவற்றை ஆராய்ந்த பின்னர் மரணதண்டனையை அமுலுக்கு கொண்டுவருவது தொடர்பான இறுதி முடிவை ஜனாதிபதி எடுக்கவுள்ளார்.

மரணதண்டனையை மீளவும் நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்.

இதேவேளை, அரசியல் அமைப்பில் ஒவ்வொரு மனிதன் உயர்வாழ்வுக்கும் உத்தரவாதம் வழங்கப்பட்டிருக்கிறது.

மரண தண்டனையை மீண்டும் அமுலுக்கு கொண்டுவருவதன் மூலம் அரசாங்கம் ஒரு மனிதனின் உயிரைப்பறிக்க முனைகிறது.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மரணதண்டனை வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது.

இதற்கு மனித உரிமை அமைப்புக்களும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார். (உ-8)

# சிறுவர் திறன் விருத்தி போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு நிதியம் மருதங்கேணி பிரதேச செயலக மட்டத்தில் நடத்திய சிறுவர் திறன் விருத்திப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

**பேச்சுப் போட்டி - தனி**
**(கீழ்ப்பிரிவு)**

1ம் இடம் :அ.அனந்தா யா/ செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை,

2 ம் இடம் : ஜெ.ஜெயப்பிரசாந்தி யா/ செம்பியன் பற்று அ.த.க.பாடசாலை,

3 ம் இடம்: க. ஜெனிதா யா/ செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை

**கவி யரங்கம் - தனி**
**(மேற்பிரிவு)**

1ம் இடம்: க. அருள் வதனி யா/செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை

2ம் இடம்: ச.ரகுதீஸ் யா/ஆழியவளை அ.த.க. பாடசாலை

3ம் இடம்: சி. துர்க்கா யா/ நாகர்கோவில் ம.மகாவித்தியாலயம்

**கவியரங்கம் - தனி**
**(மத்தியபிரிவு)**

1ம் இடம் :தி. பிரதாஜினி யா/ தாளையடி றோ.க.த.க. பாடசாலை

2ம் இடம் :ர. ரோசிகா யா/உடுத்துறை ம.வித்தியாலயம்

3ம் இடம் :இ. ஹேமா யா/செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை. (உ)

# முஸ்லிம் பிரதிநிதிகள் - புலிகள் சந்திப்புக்கு க.கா. குழு ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு முஸ்லிம் மக்களின்பிரச்சினைகள் தொடர்பாக முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சந்திப்பு ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மேற்கொண்டு வருகிறது.

இச்சந்திப்பு அடுத்த வாரத்தில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு-கிழக்கு மாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றம், காணிப்பிரச்சினை, விவசாய நடவடிக்கைகள் குறித்து இச்சந்திப்பில் பேசப்படும் என கூறப்படுகின்றது.

இவ்விடயங்களில் இணக்கம் காணப்படும் பட்சத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி ஜப்பானில் நடைபெறவிருக்கும் பேச்சு வார்த்தையில் இது பறறி ஆராய்ந்து இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, இவ்விருதரப்பினரிற்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்பு நடைபெறும் எனவும், இச்சந்திப்பை நடத்துவதற்காக இருதரப்பினருடனும் தாம் தொடர்புகொண்டுள்ளதாகவும் கண்காணிப்புக் குழு அறிவித்துள்ளது. (உ-10)

# இவ்வாண்டு இறுதியில் அரங்கக் கலைவிழா

(கொழும்பு)

இலங்கையின் இளம் அரங்க கலைஞர்களுக்கான அரங்கக் கலைவிழா ஒன்றை நடத்த இசை, பேச்சு மற்றும் பேச்சாற்றல் என்பவற்றிற்கான நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாண்டின் இறுதியில் நடைபெறவுள்ள இவ்விழாவினை மதிப்பீடு செய்ய வெளிநாட்டு நடுவர்கள் இங்கு வரவழைக்கப்படவுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த கலைஞர்களும் இந்தக் கலைவிழாவில் பங்குபற்றலாம்,

மிகவும் அனுபவம் வாய்ந்த சர்வதேச தரம்பெற்ற பிரிட்டிஷ் கலைஞர்கள், உள்ளூர் கலைஞர்களின் திறமைகளை மதிப்பீடு செய்யவுள்ளனர். (உ-10)

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்திய தூதரைச் சந்திக்கும்

(கொழும்பு)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபன் சென்னைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது இந்தியாவின் பங்கு, பங்களிப்பு அவசியம் என்பதனை வலியுறுத்தும் பொருட்டு இது தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ளும் நோக்குடனும் இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இதேவேளை, சமாதானப் பேச்சுவார்த்தையில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து அறிந்து கொள்வதற்கும் இந்தியாவை சமாதானமுயற்சியில் அதில் பங்கு கொள்ள வைப்பது குறித்தும் கொழும்பு வாழ் தமிழ்த் தேசிய பணிக்குழுவும் இந்தவாரம் கூடி ஆராயவுள்ளது. (உ-8)

# சட்டவிரோத மண் அகழ்வு கரணவாயில் அதிகரிப்பு

(கரணவாய்)

கரணவாய் கிராய் மயானத்தை அண்டிய பகுதிகளில் சட்டவிரோத மாக மண் அகழப்படுவதாக கூறப்படுகிறது.

எவ்வித அனுமதியுமின்றி பிற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் உழவு இயந்திரங்களில் அடிக்கடி இத்தகைய மண் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபடுவதாகத் தெரியவருகின்றது.

இது தொடர்பாக, இப்பகுதி பொதுமக்களால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (உ-29)

# சமுர்த்தித்திட்டம் பற்றிய ஆரம்ப வதிவிடப் பயிற்சி

## சிலாபத்தில் இடம்பெறும்

(சண்டிலிப்பாய்)

யாழ். மாவட்ட சமுர்த்தி முகாமையாளர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சமுர்த்தித்திட்டம் தொடர்பான நான்கு நாள் ஆரம்ப வதிவிடப் பயிற்சி நெறி ஒன்று எதிர்வரும் 11ஆம் திகதி முதல் 14ஆம் திகதிவரை சிலாபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியானது கட்டம் கட்டமாக இரண்டு பிரதேச செயலகங்கள் என்ற அடிப்படையில் இடம்பெறவுள்ளது.

அதன் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 11 ஆம் திகதி ஆரம்பமாகும்வதிவிடப்பயிர் சியில் கலந்துகொள்ள வுள்ளனர்.

சமுர்த்தி வங்கிகளை ஸ்தாபித்தல், பணிகளைத்துரிதப்படுத்தல் பற்றிய பயிற்சிகள் இதில் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், இப்பயிற்ச்சி நெறியில அந்தந்தப் பகுதி பிரதேச செயலர்கள் மற்றும் உதவி பிரதேச செயலர்களையும் கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (உ-258)

## பொலிஸ்மா அதிபர் உத்தரவு

(கொழும்பு)

நாட்டில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் தமிழர்களின் முறைப்பாடுகளை தமிழ் மொழியில் பதிவுசெய்து முறைப்பாட்டாளர்களின் கையொப்பத்தை பெறுமாறு பொலிஸ்மாஅதிபர் ரீ.ஈ. ஆனந்தராஜா பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிட்டுள்ளார். (உ-10)



"தாயகம் மீளும் வடமாகாண முஸ்லிம்களின் அபிலாஷைகள்" என்னும் தலைப்பில் புத்தளம் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ். மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் எம். பஷீர் உரையாற்றுவதையும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், யு. என். எச். சீ. ஆர் பிரதிநிதி வெரோனிகா உட்பட கூட்டத்தில் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காணலாம் (படம் : புத்தளம் நிருபர்)

# வாழ்வில் அலர்ஜியைத் தவிர்த்திட ஆவன செய்து கொள்வோம்

மக்களுடைய அன்றாட வாழ்வில் சாதாரணமாக பலரும் இன்று அலர்ஜி என்ற சொல்லைப் பாவிப்பதனை நாம் காணக் கூடியதாக உள்ளது. இந்த வார்த்தையின் சரியான கருத்தைப் புரிந்து கொள்ளாத பலரும் தம் உடற் கோளாறுகள்,சுற்றாடற் பாதிப்புக்கள், பிடிக்காத மற்றையவர்களின் தொடர்புகள் போன்ற பலவற்றிற்கும் இது அலர்ஜி அது அலர்ஜி என்று வார்த்தையைத் தூக்கிப்போடுவதை நாம் அவதானிக்கலாம்.

வைத்திய விஞ்ஞானக் கருத்தின் படி அலர்ஜி என்றால் மனிதன் தன்னைச் சுற்றவுள்ள அபாயமில்லாத சிறு பொருள்களின்,சில மாறுபட்ட நிலையினாற் கூட அதிகமான பாதிப்படைவது எனக் கூறுகின்றார்கள். இந்த நிலையினால் ஏற்படக் கூடிய உளத்தாக்கங்கள்,உடறதாக்கங்கள் சில சமயங்களில் உயிர் ஆபத்தையும் விளைவிக்க வல்லன.

### அலர்ஜியின் வகைகள்

அலர்ஜிகள் பலவகைப்படும் இதனால் ஏற்படும் தாக்கங்களும் பல விதமானவையாகும். பிடிக்காத சூழ்நிலைகளால், விஷக்கிருமிகளால் சில ரசாயனப் பொருட்களால், சில உணவுவகைகளால், சில அழகு சாதனப் பொருட்களால், அன்றாடம் நாம் உபயோகிக்கும் பொருட்களின் மாறுபட்ட தூய்மையற்ற தன்மைகளால்,உணவுகளின் தரக்குறைவுகளாலும் மாறுபட்ட தன்மைகளாலும் மற்றும் வாழ்க்கையின் அன்றாடப் பழக்கவழக்கங்களாலும் அலர்ஜி ஏற்பட வாய்ப்புண்டாகின்றது.

சுவாசக்குழாய்கள் தாக்கப்படுவதும் தோல் (சரும) வியாதிகளும் குடற் புண் ஏற்படுதலும், உளத்தாக்கங்களும் அலர்ஜியினால் ஏற்படலாம். சில மருந்துவகைகளும் சில அன்றாட உணவு வகைகளும் கூடச்சிலருக்கு அலர்ஜியை ஏற்படுத்துகின் றது. இதனாற்றான் சில நோயாளி கட்கு மருந்துகள், உணவுகள் ஒத்து வருமா என்பதை முதலிற் சிறி தளவுபரீட்சித்துப் பார்த்தபின்அவற்றை அவரவர்க்குக் கொடுப்பார்கள்.

இயன்றளவு நாம் அனுபவரீதியாக எமக்கு ஏற்காதவற்றை விலக்கி வாழப்பழகிக் கொண்டால்அலர்ஜியினாற் பாதிக்கப்படாமல் வாழலாம்.

**மருத்துவவிளக்கம்**

எங்கள் மனத்தில் உண்டாகும் பயமும அதன் காரணமான பலவீனமுமே பெரும்பாலும் எமக்கு அலர்ஜியை ஏற்படுத்தி விடுகின்றது. இது வருமுன் காப்பது மிகச் சிறந்தது- வந்தபின் காப்பது தற்காலிகமான செயற்பாடகவே இருக்கும்.

### ஒவ்வாமைக்கு பரிகாரம்

ஒருவருடைய சுற்றுப்புறச் சூழலில் இருக்கக்கூடிய அலர்ஜிக்குக் காரணமானவற்றைப் பட்டியல் போட்டு கண்டு பிடித்து ஆவன செய்தால் ஒத்துவராதனவற்றைத் தவிர்த்துக் கொண்டு நமமை நாமே பாது காத்துக்கொள்ளலாம்.

நல்லன வேண்டுதல், அல்லன தவிர்தல்,வேண்டாதன விலக்கி- வேண்டியன கொள்ளுதல் மக்களுடைய அன்றாட வாழ்விற்கவனத்திற்குரிய பழக்கமாகி விட்டால் அலர்ஜி என்ற பயத்திற்கே இடமில்லை.இது எல்லோர்க்கும் நலம் தரும் நல் வழியாக அமைந்து வாழ்வில் நலம் பல தரும் என்பதில் ஐயமில்லை.

**நீர்வைமணி**

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்கிழமை பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சீ.சிவநேசன் தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில், முதன்மை விருந்திரைாக யாழ்மாவட்டப் பாராளு மன்ற உறுப்பினர் நா.ரவிராஜும் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கல்விக் கோட்டஉதவிக்கல்விப்பணிப்பாளர் இ.சிவஞான சுந்தரம்,யாழ். மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி. இளம் பரிதி ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஓய்வு பெற்ற அதிபர் செ.விநாயகமூர்த்தி மேற்படி பாடசாலையின் பழைய மாண வன் சி. சிவரூபன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-10)

## பாராட்டு விழா

(தென்மராட்சி)

மூத்த பத்திரிகையாளரும் வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவருமான எஸ்.கதிராகாமத்தம்பிக்கும், தேசிய சமாதானப் பேரவையின் உப செயலாளருமான நிமலன் கார்த்திகேசருக்குமான பாராட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப் பாராட்டு விழா யாழ். மத்திய கல்லூரியில் சங்கத்தின் தலைவர் எஸ்.என்.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் சங்கத்தின் மாதாந்த வெளியீடாகிய பத்திரிகையாளர் செய்திக்கடிதமும் வெளியிடப்படவுள்ளது.

இவ் விழாவில், துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், பேராசிரியர் சபா ஜெயராசா,சீ.வீ.கே. சிவஞானம், மத்திய கல்லூரி அதிபர் க. இராஜதுரை மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ். பரமநாதன் ஆகியோர் பாராட்டுரைகள்நிகழ்த்தவுள்ளனர்.(உ-77)

## மினிபஸ்சேவை

(கரணவாய்)

பருத்தித்துறையில் இருந்து மானிப்பாய் ஊடான நவாலிக்கான மினிபஸசேவை கடந்த மாத நடுப்பகுதியிலிருந்து ஆரம்பிக்கபட்டுள்ளது.

காலையிலும் முற்பகலிலுமாக இரு மினிபஸ்களள இச்சேவையில் ஈடுபடுத்தப்பட்டுளளன. (உ-29)

# நிபந்தனைகள் விதிப்பதன் மூலம் எதனையும் சாதித்துவிடமுடியாது

## புலிகளை ஆயுதங்களை கீழே போடுமாறு கோருவது நல்லதல்ல லலித்கொத்தலாவல

(கொழும்பு)

அதி உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்பட வேண்டுமானால் புலிகளை ஆயுதங்களைக் கிழே போடுமாறு நிபந்தனைநிதிப்பது நல்லதன்று. புலிகள் மீதுநம்பிக்கையின்மையினாலேயே இவ்வாறான நிபதனை விதிக்கப்படுகிறது.

அவர்கள் மீது எனக்கு பூரண நம்பிக்கை இருக்கிறது.அவர்கள் மீணடும் ஒரு யுத்தத்திற்குச் செல்ல மாட்டார்கள்.

நிபந்தனைகள் விதிப்பதன் மூலம் எதனையும் சாதித்துவிட முடியாது.சினேகம், புரிந்துணர்வுகளின் மூலம் எதனையும் சாதித்து விடமுடியும்.

'சோலோயு' சினேகம் புரிந்துணர்வு அமைப்பை உருவாக்கி சமாதானத்திற்காகப்பாடுபட்டுவரும் பிரபல தொழிலதிபர் தேசமான்ய லலித் கொத்தலாவல இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இன்றைய நிலை தொடர்பில மேலும் கருத்துவெளியிடுகையில், தமது இயல்பு வாழ்க்கை மீண்டும் ஏற்படுத்தப்படவேண்டும் என தமிழ் மககளும்அவர்கள் நலன்சார் அமைப்புகளும் கோரிக்கை விடுவதில் எந்தத் தவறும் இல்லை. அதிஉயர் பாதுகாப்பு வலய விடயத்தில் விட்டுக் கொடுப்புகள் இருக்கவேண்டும்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கொள்ளை, கொலை என்பன இல்லை.சட்டம் மதிக்கப்படுகிறது. அவர்கள் கலை, கலாசாரம் ,மதம் என்பவற்றைப் பேணி நடக்கிறார்கள். அவற்றுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும்

நாம் சிங்களவர் ,தமிழர், முஸ்லிம்கள் என வேறுபட்டு இருந்தால் சந்தர்ப்பவாத அரசியல் நடத்துபவர்களுக்கு இலாபமாகி விடும்.மக்கள் ஏமாந்து விடக்கூடாது. நாம் ஒற்றுமையாக இருந்தால் இதைத்தவிர்க்கலாம்.

இனவாதம் தூண்டுபவர்கள் இரு பகுதியிலும் இருக்கிறார்கள். இவ்வாறு இனவாதம் தூண்டுபவர்கள் எவராக இருந்தாலும் கைது செய்யக்கூடிய சட்டம் கொண்டு வரப்பட வேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படுவது அவசியமானது.

சமாதான முன்னெடுப்பில் இந்த நாட்டு மக்களின் பங்களிப்பையும் பெற வேண்டும்.

தமிழ்,சிங்கள,முஸ்லிம்மக்களைப் பிரதி நிதித்துவப்படுத்துகின்ற வகையில் வடக்கு-கிழக்குகில் சமாதானக் கவுன்சில்கள் நிறுவப்படல் வேண்டும்மென்று கூறியுள்ளார். (உ)



## கழுத்துறைக் கைதிகளைப் பார்வையிட பேணாட் குணதிலக சிறைச்சாலை செல்வார்

(கொழும்பு)



கழுத்துறைச் சிறைச்சாலையில் உள்ள தமிழ்க்கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தினை பார்வையிடுவதற்காக மன்னார் மாவட்ட ஆயர் ராஜப்பு யோசப் அடிகளார் மற்றம் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலக்க ஆகியோர் எதிர் வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிறைச்சாலைக்கு செல்லவுள்ளனர்.

இதேவேளை,தம்மை விரைவில் நீதிமன்றில் ஆஜர்படுத்தி தமக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் எனவும், இல்லாவிடின் தம்மை விடுதலை செய்ய வேண்டும் எனவும் கோரி உண்ணாவிரதம் இருந்து வரும் இவர்களை விடுதலை செய்ய சட்டமா அதிபரூடாக நடவடிக்கை எடுக் கப்படும் என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள் ளார்.

அத்துடன், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு பிரதம நீதிஅமைச்சர் தீர்மானங்களை எடுக்க வேண்டும் என, நீதி சட்ட சீரமைப்பு அமைச்சர் வி.ஜ.மு.லொக்கு பண்டார கூறியுள்ளார். (உ-10)

## உலக வங்கிக்குழுவின் யாழ். வருகை ரத்து

(தென்மராட்சி)

திட்டமிட்டவாறு உலக வங்கிக் குழு இன்று யாழ்ப்பாணம் வருகைதர மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் உயர்மட்டஅதிகாரி நரேஸ் துரைக்சுவாமி தலைமையிலான குழுவினர் இன்று யாழ். செயலகத்தில் அரசஅதிபா மற்றும் திணைக்களத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்திக்கவும்,

உலக வங்கியின் நிதி அனுசரணையுடன் குடாநாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் குறித்து இச் சந்திப்பில் ஆராயவும் திட்டமிட்டிருப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்குழுவினர் பிறிதொருநாள் யாழ்ப்பாணம் விஜயம் செய்வர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-77)

## ஒப்பந்தத்தின்படி ஒழுக வேண்டும் நோர்வேக் குழு புலிகளை கோரும்

(கொழும்பு)

அரசாங்கத்தாலும் தமிழீழ விடுதலைப்புலிகளாலும் கடந்த வருடம் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சகல அம்சங்களையும் தமிழீழ விடுதலைப்புலிகள் கடைப்பிடித்து நடக்க வேண்டும் என இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு கேட்டுக் கொள்ளவுள்ளது.

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய பிரதிகளை, நோாவே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர் சன், பிரதி வெளி விவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் மற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் ஆகியோர் சந்திக்கும் போது இந்தக் கோரிக்கைவிடப்படவுள்ளது.

நோர்வே அமைச்சர்கள் இருவரும் எதிர் வரும் 12ஆம் திகதி இலங்கை வரவுள்ளமையும் மறு நாள் புலிகளைச்சந்திக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் கட்டளை இடும் அதிகாரம் கண் காணிப்புக்குழுவுக்குண்டு எனத்தெரிவித்துள்ளார்.(உ-8)

## கிறிஸ்தவ சமய அலுவலகம் திறப்பு

(கொழும்பு)

கிறிஸ்தவ சமய விவகார அமைச்சு அலுவலகம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் அலுவலகம் இல 98 டி.எஸ் சேனநாயக்கா மாவத்தை, கொழும்பு-08 என்னும் முகவரியில் அமைந்துள்ளது. (உ-8)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கு விரிவுரை வகுப்பு

(சுண்டுக்குளி)

யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான விரிவுரை கடந்த சனிக்கிழமை துரையப்பா விளையாட்டரங்கில் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் கடடன் டி.ஏ.எம். குணசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

40 இற்கும் அதிகமான மத்தியஸ்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

விளையாட்டு விதிமுறை மற்றும் கலந்துரையாடலை கொழும்பில் இருந்து வருகை தந்துள்ளபோதனாசிரியர் எம்முசீன் நெறிப்படுத்தினார்.

யாழ். உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவர் எஸ் ஆனந்தராஜா இவ் விரிவுரையினை ஒழுங்கு செய்தமை குறிப்பிடத்தக்கது. (உ-110)

## இன்று ஒரு தகவல்

### மற்றவர் மகிழ்ச்சி

இந்த உலகத்தில் நாம் மட்டும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். பாருங்கள் அது சாத்தியமில்லாத விடயம். பக்கத்திலே இருக்கிறவர்களும் சந்தோஷமாக இருந்தால் தான் நாமும் சந்தோஷமாக இருக்க முடியும். இதைப்பற்றி விவரமாகப் புரிஞ்சு கொள்ள வேண்டும் என்றால் அதற்கு ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள். ராஜ்யவர்த்தனன் என்று ஒரு ராஜா இருந்தார். அந்த ராஜா 7ஆயிரம் வருடம் தன்னுடைய ராஜாங்கத்தை நல்லபடியாக நிர்வாகம் செய்து கொண்டு வந்தார். 7ஆயிரம் வருடம் எப்படி ஒருத்தர் இருக்க முடியும் என்கிற சந்தேகம் வருகிறதா? இது ஒரு புராணக் கதை, அதனாலே அதை எல்லாம் மறந்து விட்டு கதையை மட்டும் கவனியுங்கள். அதுதான் எமக்கு முக்கியம்.

மக்களுக்கு எல்லாம் அந்தராஜா பெயரிலே மிகவும் மரியாதை. ஒரு நாள்-ராணி அந்த ராஜாவுக்கு தலையிலே எண்ணெய் தேய்ச்சுக் கொண்டிருந்தார்களாம். திடீர் என்று அந்த அம்மா கண்கலங்க ஆரம்பித்தாள். என்ன விடயம் ஏன் கலங்குகிறாய்? என்று கேட்டிருந்தார் ராஜா. உங்கள் தலையிலே ஒரு முடி நரைத்திருக்கு. அப்படி என்றால் உங்களுக்கு வயது ஆகிவிட்டது என்று தானே அர்த்தம்! அதுதான் எனக்கு கவலையாய்ப் போய்விட்டது. அதுதான் அழுதேன்! அப்படி என்றார். இதுக்குப் போய் யாராவது அழுவார்களா? இது எமன் எனக்குக் கொடுத்திருக்கிற எச்சரிக்கை! நான் உடனே காட்டுக்குப் போய் தவம்,பண்ண வேண்டும் என்றார் ராஜா. நானும் கூட வருவேன்! என்றாள் அந்த அம்மா. ராஜாவும்- ராணியும் காட்டுக்குப் போய் விட்டார்கள். மக்கள் நிலைமை என்ன ஆகிறது. மக்கள் பார்த்தார்கள். நீங்கள் இரண்டு பேருமே காட்டுக்குப் போக வேண்டாம். கொஞ்சம் இருங்கள் இதோ வந்து விடுகிறோம். என்று சொல்லி விட்டு மக்கள் எல்லாம் மிகவும் தூரத்திலே இருந்து ஒரு சூரிய ஆலயத்துக்குப் போனார்கள். சூரியனை நோக்கி தவம் செய்ய ஆரம்பித்தார்கள். மூன்று மாதும் ஆகிவிட்டது. சூரியபகவான் நேரிலே அவர்களுக்கு காட்சி கொடுத்தார். உங்களுக்கு என்ன வரம் வேண்டும்? கேளுங்கள் என்றார். எங்க ராஜா இன்னும் 10ஆயிரம் வருடங்கள் நோய் நொடி இல்லாமல் இளமையோடு இருக்க வேண்டும் எங்கள் தேசத்தை ஆழ வேண்டும் என்றனர். சரி அப்படியே வரம் தந்தேன்! என்று சொல்லிவிட்டு சூரியபகவான் போய் விட்டார். ராஜாவுக்கு இந்த விடயம் தெரிந்தது. அவர் சந்தோஷப்பட வேண்டுமல்லவா? சந்தோஷப்படவில்லை. வருத்தப்பட்டார். மகிழ்ச்சியடையிறதுக்குப் பதிலாக வருத்தப்படுகிறாரே ஏன் என்று கேட்ட ராணி, இந்த வரத்தைக் கேட்டு நான் எப்படி சந்தோஷப்பட முடியும். நான் பத்தாயிரம் வருடம் உயிரோடு இருக்கலாம். ஆனால் நீ இருக்க மாட்டாயே. இந்த வரத்தை எனக்கு வாங்கிக் கொடுத்த மக்களும் இருக்க மாட்டார்களே! என்னுடைய ராணியும் எனக்குப் பிரியமான மக்களும் இல்லாமல் நான் மட்டும் 10ஆயிரம் வருடம் எப்படி சந்தோஷமாக இருக்க முடியும் அப்படி என்றார் ராஜா.

அதன் பின்னர் அந்த ராஜாவும் ராணியும் அதே சூரியன் ஆலயத்துக்குப் போனார்கள். தவம் பண்ணினார்கள். நாட்டிலே உள்ள எல்லாருமே 10 ஆயிரம் வருடங்கள் சந்தோஷமாக வாழ வேண்டும் என்ற வரத்தை வாங்கினார்கள். அதன் பின்னர் எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்தார்கள் இது தான் அந்தக்கதை.

மார்க்கண்டேய புராணத்திலே இந்தக் கதை வருகிறது. மார்க்கண்டேயர் இந்தக் கதையை சொல்கிறார். அதை ஒரு பெரியவர் புக்திப் பிரசங்கத்திலே சொன்னார். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை என்ன என்றால் நாம் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பது தான். அந்தக் காலத்திலே அப்படி இருந்தார்கள். இந்தக் காலத்திலே அப்படியா இருக்கிறார்கள்? அலுவலகத்திலே வேலை பார்க்கிற ஒருவர் தன்னுடைய முகாமையாளரிடம் போனார். ஐயா இந்த அலுவலகத்திலே நீங்கள் சந்தோஷமாக இருந்தால் நான் சந்தோஷமாக இருக்க முடியும்! நீங்கள் சந்தோஷமாக இருப்பதற்கு என்ன வழி என்று கேட்டார். அது உன் கையில் தான் இருக்கிறது என்றார் முகாமையாளர். எப்படி என்று கேட்டார்? இவர் நீ இடமாற்றம் வாங்கிக் கொண்டு வேறோர் ஊருக்குப் போய்விடு அது போதும் நான் சந்தோஷமான இருப்பேன்! அப்படி என்றார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# பிரதமரின் இந்தியப் பயணம் சமாதான ஊக்க சக்தி

## இந்தியப் பத்திரிகைகள் கருத்து

(புதுடில்லி)

பிரதமர் ரணிலின் இந்திய விஜயத்திற்கு அரசியலாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளதுடன், இந்தியப் பத்திரிகைகள் பலவும் சமாதான முயற்சிகளுக்கு இப்பயணம் உந்து சக்தியாக அமைவதாக கருத்து வெளியிட்டுள்ளன.

இந்தியா ருடே சஞ்சிகை ஏற்பாட்டில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்பதற்காக கடந்த சனியன்று இந்தியா பயணமானதும் அங்கு இந்தியத் தலைவர்கள் உட்படப் பலரையும் சந்தித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் சமாதானச் சூழல் மலர்ந்து வரும் இவ்வேளையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம் மிகவும் பயனுள்ளதாகவும் சமாதான முயற்சிகளுக்கு மேலும் உந்து சக்தியை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

இலங்கையில் நீண்ட கால யுத்தத்திற்கு பின்னர் சமாதானச் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி மனிதக் கொலைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

இலங்கையில் நடைபெறுபவை இந்திய மக்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும் என இந்தியப் பத்திரிகைகள் தமது கருத்தை வெளியிட்டுள்ளன. (உ)

# எதிர்ப்புக்களை எதிர்கொள்ள என்றும் தயாராகவுள்ளேன்

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)



அண்மைக்காலங்களாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் தமக்கெதிரான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் இத்தகைய எதிர்ப்புக்களை எதிர்கொள்ளத் தான் தயாராக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கண்டி ஸ்ரீதலதா மாளிகையின் பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்ட பின்னர், ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களுக்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,

சமாதானப் பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாகவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளின் கூட்டு சம்பந்தமாகவும் பாராளுமன்றத்தில் பேசப்படும் போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதுதொடர்பாக ஜனாதிபதி தலைமையில் கருத்தரங்குகள் நடைபெற்றன.

தற்போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் அரசியல் கூட்டணி ஒன்று அமைப்பது தொடர்பான பேச்சு வார்த்தைகள் வெற்றியளித்துள்ளன.

எனினும் இக்கூட்டணி தொடர்பான இறுதி முடிவு கட்சியின் மத்திய குழுவின் தீர்மானத்தின் பின்னரே எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்விரு கட்சிகளினதும் கூட்டணியை அடிப்படைக் காரணங்களாக வைத்துக் கொண்டு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் தனக்கு எதிரான பொய்ப்பிரசாரங்களிலும், நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக் காட்டியுள்ளார். (உ-8)

## சிறையில் வாடும் தமிழ் அரசியல்

# கைதிகளின் விடுதலைக்கு உதவுக! ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

களுத்துறை, மட்டக்களப்பு ஆகிய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் தலையிட்டு, அவர்களின் விடுதலைக்கு உதவுமாறு இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளரும் ,பாராளுமன்றஉறுப்பினருமான எஸ்.சதாசிவம் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கும், பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவத்திற்கும் இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விரிவான கலந்துரையாடலில் இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இச்சந்திப்பின் போது, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக சட்ட ஆலோசனைகள் பெற்றுக் கொண்ட பின்னர்,மனிதாபிமான அடிப்படையில்கைதிகளை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.



களுத்துறைச் சிறைச்சாலை தமிழ் அரசியல் கைதிகளில் 61பேர் கடந்த சனிக்கிழமை முதல் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(உ-08)

## இராசி பலன்

**04. 03. 2003**

**(மாசி 20, செவ்வாய்)**

| | |
|---|---|
| பிரதமை | மு.ப 9.50வரை |
| பூரட்டாதி | பி.ப 1.48வரை |
| இராகுகாலம் | 3.27-9.57 |
| சுபநேரம் | 10.57 - 12.27 |

**மேடம்**
அமைதிக்குறைவு, முயற்சி தாமதம், சுபசெலவு, வேலைக்கஷ்டம்.

**இடபம்**
குடும்ப மகிழ்ச்சி, தனவரவு, காரிய நன்மை, தெய்வானுகூலம்.

**மிதுனம்**
தாரச்செய்தி,அதிகபிரயாசை,குடும்ப சுகம்,அதிகாரம்.

**கடகம்**
பிரயாணம்,வயிற்றுக்கோளாறு, அதிகாரிகள் மனஸ்தாபம்,உடல்உழைப்பு.

**சிங்கம்**
உடல்வியாதி,காரிய தடங்கல், வீண் பகை,வேலைக்கஷ்டம்.

**கன்னி**
நினைத்தகாரியம் கைகூடும், செல்வாக்கு, நண்பர்கள் சந்திப்பு, வாகன வசதி.

**துலாம்**
திடீர்பயணம்,சுகவாழ்வு, புதிய முயற்சி, சத்துருஜெயம்.

**விருச்சிகம்**
பிரயாண நன்மை, காரிய இடையூறு, சிறுவியாதி, மனச்சஞ்சலம்.

**தனுசு**
கௌரவக்குறைவு, முயற்சி தாமதம், கல்வியில் ஆர்வம், உடல்சோர்வு.

**மகரம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், தனவரவு, பிறர் உதவி, இனியசம்பவம்.

**கும்பம்**
காரியதாமதம், எதிர்பாராத நன்மை ,உஷ்ணநிலை,தனவிரயம்.

**மீனம்**
புதிய பொருள் சேர்க்கை,நண்பர்கள் உதவி, புதியமுயற்சி, சயனசுகம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# ஒன்றிணைந்து கருமமாற்ற கிராமியசாலைக் காரியாலயம்

(கொழும்பு)

நாட்டில் உள்ள பிரதேச செயலாளர்கள் பிரிவுகள் அனைத்திலும் கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ,விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்ஆகியோர் ஒரே காரியாலயத்தில் இருந்து கடமையாற்றும்வகையில்பிரதேச செயலாளர்பிரிவுகள் தோறும் கிராமியசாலைக்காரியாலயங்கள் அமைக்கப்படவுள்ளது.

இவ்வாறு உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சர் அலுக் அலுவிகார மாத்தளை மாவட்டத்தில் நடைபெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கான கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகிய 3வகையான உத்தியோகத்தர்களும் வெவ்வேறு காரியாலயங்களில் கடமையாற்றுவதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

எனவே, இம்மூன்று உத்தியோகத்தர்களும் ஒரே காரியாலயத்தில் கடமையாற்றும் வகையில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இத்தகைய கிராமியச்சாலைக காரியாலயங்கள் அமைப்பதன் மூலம் மக்கள் இலகுவாகவும் விரைவாகவும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள் என்றார். (உ-10)

# மண் எடுத்துச் செல்ல மாற்று வழிமுறை

(கொழும்புத்துறை)

மண் அகழ்வதற்கும், அதனை அனுமதியின்றி ஏற்றிச் செல்வதற்கும் பல இடங்களிலும் தடை விதிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து சட்ட விரோத மண் அகழ்வாளர்கள் புதிய யுக்திகளைக் கையாண்டு தமது கை வரிசையைக் காட்டி வருவதாகத் தெரியவந்துள்ளது.

வாகனங்களில் மண்ணை ஏற்றிச் செல்வதற்குப் பதிலாக மண் அகழும் இடத்திற்கு சீமெந்தையும் கல்லையும் எடுத்துச் சென்று அங்கு வைத்து கல் அரிவதில் ஈடுபடுகின்றனர்.

அரியாலை,அரசடி, மண்பிட்டி ஆகிய இடங்களில் இவ்வாறான செயற்பாடுகள் பரவலாக இடம் பெற்று வருகின்றன. (உ-5)

செய்வானை நாடி வினை நாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்
-குறள்-

வலம்புரி

## ஏமாற்றம் நிலைக்காது

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர், உலக நாட்டுப் பிரதிநிதிகள் அடிக்கடி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கின்றனர்.ஐ.நா.சபையின் உப அமைப்புக்கள்,வெளிநாட்டுத் தூதுவர்கள், சர்வதேச நேய அமைப்புக்களின் பிரதிநிதிகள், உலக வங்கிப் பிரதிநிதிகளெனப் பலர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகிறார்கள். அவர்களின் வருகையால் விரும்பியோ விரும்பாமலோ, யாழ். அரச அதிகாரிகள் சுறுசுறுப்படைகிறார்கள் எனினும்வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் வருகை குறித்து குடாநாட்டு மக்கள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

வெளிநாடுகளில் இருந்து வருகின்ற பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் குடாநாட்டு மக்களின் வாழ்க்கை நிலைகுறித்து ஆராய்வதற்காக வருவதாக கூறிக்கொண்டாலும், அவர்களின் வருகையால் யாழ்ப்பாண மக்கள் எந்த நன்மையையும் அனுபவிக்கவில்லை. இதன் காரணமாகவே அவர்களின் வருகையை இட்டு மக்கள் பெரிதுபடுத்திக் கொள்வதில்லை.

மக்கள் தான் அதுபற்றி அதிகம் அக்கறை காட்டிக் கொள்ளவில்லை என்றால், அரச அதிகாரிகளும் உலக நாட்டுப்பிரதிநிதிகளிடம் உதவி கேட்பதாகவில்லை. இதன் காரணமாக வருகின்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு குடாநாட்டு மக்கள் ஆய்வுகூடத் தவளைகள் போல காட்சி தருகின்றார்கள்.

வருகிறார்கள்; யாழ் செயலகத்தில் கூடுகிறார்கள்;இடம் பெயர்ந்த முகாம்களுக்குச் செல்கிறார்கள் அங்கு மக்களின் வேடிக்கைப் பார்வைக்குள்; துன்பரேகையின் பரவலுக்குள் - வறுமையின் வலயத்திற்குள் தங்களை உயர்த்திக் கொண்டு வந்தவர்கள் ஆத்ம திருப்தியடைகிறார்கள்.யாழ்ப்பாணம் விஜயம் முற்றுப்பெறுகிறது. வந்தவுடனேயே கொழும்பு திரும்புகிறார்கள்.

யாழ்.அரச உயர் அதிகாரிகளின் கையசைப்பு வென்றுவிட்டோம் - வரவேற்று, முகாம் காட்டி வந்தவர்களை வெற்றிகரமாக அனுப்பிவிட்டோம் என்று அரச வாகனங்களில் வீடு செல்கிறார்கள், கடமை முடிகிறது. சம்பளப்பட்டியல் தயாராகிறது.கூடவே முகாம் சுற்றிப்பார்த்ததற்கான விசேட - மேலதிகக் கொடுப்பனவுகள்...

இது தான் தற்போதைய யாழ்ப்பாண நிலைமையின் சுருக்கம்.

ஆனால் ஒன்று மட்டும் உண்மை. சிலரை சில நேரங்களில் ஏமாற்றலாம். ஆனால் பலரைப் பலநேரங்களில் ஏமாற்றி விட முடியாது. ஆம்.யாழ்ப்பாணத்து மக்கள் ஏமாறுபவர்கள் அல்ல. அவர்களை ஏமாற்றவும் முடியாது என்பதை அரச அதிகாரிகளும் அரசியல்வாதிகளும்,யாழ்ப்பாணத்தைச் சுற்றிப் பார்க்க வருபவர்களும் உணர்ந்து கொள்ளவேண்டும். ஏனெனில் இடம்பெயர்ந்த முகாம்களில் கூடி நின்று பார்த்த மக்கள் தொடர்ந்தும் ஏமாறத் தயாரில்லை.

# புகையிலை பாவனைக் கட்டுப்பாடு உலகம் முழுமைக்கும் ஏன் தேவை?

புகைத்தல் என்பது நாடுகளின் எல்லைகளைக் கடந்து இடம்பெற்று வரும் ஒரு தொற்றுநோய் என்று கூறலாம். நாடுகளுக்கிடையில் வருவாயை அள்ளித்தரும் வர்த்தகப் பொருள் சம்பந்தப்பட்டிருப்பதால் இந்தப் பழக்கத்தை அழித்தொழிப்பதில் பல நாடுகளுக்கு அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை.

எச்.ஐ.வி,ஏ.ஐ.டி.எஸ். போன்ற நோய்களை விட இது ஒரு பயங்கரத் தொற்று நோயாகக் கருதப்பட வேண்டும். ஏனென்றால் இந்த நோய்களை விட புகைத்தலினால் வருடந்தோறும் அதிகமானவர்கள் மரணித்து விடுகிறார்கள். இன்று உயிர் வாழ்ந்து வருகின்ற மக்களில் 500 மில்லியன் பேர் புகைத்தலுக்கு பலியானவர்கள் என்று கருதப்படுகின்றது. வருடத்தில் 4.9 மில்லியன் என்ற வகையில் இறந்து போனவர்கள் 2020 இல் இந்த எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்து விடும் என்று நம்பப்படுகின்றது.

இது ஒரு உலகளாவிய பிரச்சினையாக இருப்பதால் உலகளாவிய ஒப்பந்தம் ஒன்றின் மூலமே இதனை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தலாம் எனக் கருதப்படுகின்றது.

புகையிலை கட்டுப்பாடு தொடர்பான உலகளாவிய உடன்பாடு ஒன்றை உருவாக்குவதற்கான மாநாட்டின் இறுதிக்கட்ட ஆலோசனை பெப்ரவரி 17 ஆம் திகதி ஜெனீவாவில் தொடங்கின.

இந்த உடன்பாடு அமுலுக்கு வரும்போது புகையிலை பாவனை குறைவதுடன் புகையிலை தொடர்பான நோய்களும் கட்டுப்பாட்டுக்குள் வரும் சிறப்புகளும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### ஆசிய நாடுகளுக்கு நன்மை

இந்த உடன்படிக்கையின் படி தெற்கு, தென்கிழக்காசிய நாடுகள் பெரிதும் பயன் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பிராந்திய நாடுகளில் 40 வீதமான ஆண்கள் புகைப்பிடிக்கிறார்கள். கம்போடியாவில் மட்டும் 60 வீதமான ஆண்கள் புகைப்பிடிக்கிறார்கள். உலகிலேயே இந்தோனேஷியா புகைப்பிடிப்பதில் 5ஆவது இடத்தைப் பெறுகின்றது. வாழ்நாள் முழுவதும் புகைப்பிடிப்பவர்களில் அரைவாசிப்பேர் புகைப்பிடிப்பினால் மரணத்தைத் தழுவுகின்றார்கள். தென் கிழக்காசியாவில் 24 வீதம் ஆண்களும் 35 வீதம் பெண்களும் புகையிலை சார்ந்த நோய்களான புற்று நோய், இதய நோய்கள் அல்லது பாரிசவாதம் போன்றவற்றுக்கு இலக்காவார்கள்.

புகைப்பிடிப்பது ஆண்களை விடப் பெண்கள் மத்தியில் குறைவாகவே காணப்பட்டாலும் நேபாளம், பங்களாதேஷ், மியான்மார் போன்ற நாடுகளில் 29 வீதம் பெண்கள் சிகரட் அல்லது பீடியைப் புகைக்கிறார்கள். தென் ஆசியாவின் பெரும்பாலான பெண்கள் புகையிலையை வாயில் வைத்து குதப்புகிறார்கள். இந்தியாவின் சில பகுதிகளில் இளைஞர்கள் மத்தியில் புகைப்பிடிப்பானது உலகின் மிக உயர்ந்த அளவுகளுடன் ஒப்பிடக் கூடியதாய் இருக்கின்றது. இந்தியாவில் 30 வீதமான 10 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் சிகரட் பாவிக்கிறார்கள்.

இது தான் இப்போதைய புள்ளி விபரங்கள். இந்த சிறுவர்கள் தொடர்ந்து புகைப்பிடிப்பார்களானால் அதன் காரணமாகவே இறப்பைத் தழுவிக் கொள்வார்கள். இதே சமயம் சிகரட் பாவிப்பவர்களின் சூழலில் வாழும் குழந்தைகளும் பல்வேறுபட்ட சுகாதாரப் பிரச்சினைக்கு ஆளாவார்கள். நிமோனியா, சுவாசக்குழாய் நோய்கள், ஆஸ்துமா மற்றும் நடுக்காது அழற்சிக்கும் ஆளாவார்கள். புகையிலை பாவிப்பானது சுகாதார பாதுகாப்பு, சமூக நலன்கள், உற்பத்தி குறைதல், சூழல் மாசடைதல், உணவு உற்பத்திக்குப் பயன்படக்கூடிய நிலம் பாழடைதல் போன்ற வகைகளில் சமூகத்துக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது.

**-கலாநிதி. குரோ ஹார்வெம் பிரன்ட்லான்ட்-**
**செயலாளர் நாயகம்-உலக சுகாதார ஸ்தாபனம்**

சிகரட் பாவனையானது குடும்ப செலவுகளைப் பாதிக்கும்ஒரு அம்சமாகவும் அமைகின்றது. இது செலவு கூடிய ஒரு பழக்கமாகும். இந்தப் பணம் உணவுகள், வீட்டு வசதிகள், உடைகள் வாங்குதல் போன்ற



வேறு பயனுள்ள வகையில் பயன்படுத்தக் கூடியது. பங்களாதேஷில் இறக்குமதி செய்யப்படும் 20 சிகரட்டுகள் கொண்ட ஒரு பாக்கட்டானது சராசரி ஒரு நாள் வருவாயின் அரைப்பங்காகக் கணக்கிடப்பட்டுள்ளது.

சிகரட்டுக்களின் விலைகள் அதிகம் என்பது ஒரு புறமிருக்க புகைப்பிடிப்பதால் ஏற்படும் நோய்களுக்கு நிவாரணம் தேடும் வகையிலும் குடும்பங்களின் வருமானம் செலவாகின்றது.

புகைப்பவர்களில் கால் பங்கினர் வேலை செய்யும் காலத்திலேயே இறந்து போகின்றனர். இதனால் குடும்பங்கள் வருமானம் கொண்டு வரும் ஒரு துறையையே இடைநடுவில் இழக்க நேர்கின்றது.

### கொலையாளி

புகைத்தல் என்பது ஒரு கொலையாளி. அதன் தாக்கத்தை நாம் குறைத்தாக வேண்டும். சிகரட் வரிகளை அதிகரித்தல், புகையிலை அபிவிருத்தி விளம்பரங்களைத் தடைசெய்தல், பொது இடங்களில் வேலைத் தளங்களில் புகைப்பதைக் கட்டுப்படுத்தல், புகையிலைக்கு எதிரான விளம்பரங்களை அதிகரித்தல், புகையிலை சார்ந்த பண்டங்கள் கடத்தப்படுவதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுத்தல் போன்ற செயற்பாடுகளினால் மில்லியன் கணக்கான உயிர்களைக் காப்பாற்ற முடியும். பொதுச் சுகாதாரத்தையும் பேண முடியும்.

இவை முறையாக செயல்படுவதற்கு உலக நாடுகள் உள்ளூர் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் ஒத்துழைக்க வேண்டும். விளம்பரம், வணிகத் துறைகளில் எல்லை கடந்த ஊடுருவல்கள் இடம் பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இதுகுறித்த சர்வதேச ஒப்பந்தம் ஒன்று அவசியம். அந்த வகையில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆதரவில் ஜெனீவாவில் நடந்த சர்வதேச மாநாட்டில் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் மே மாதம் நடைபெறவிருக்கும் மாநாட்டில் உலக நாடுகளின் சுகாதார அமைச்சர்களால் அங்கீகரிக்கப்படவேண்டும்.

அதன்பின் உலகளாவிய நிலையில் புகையிலைப் பாவனை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (பி)

# முறைகேடான இடமாற்றங்களைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மாகாணசபைகளின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் முறைகேடான இடமாற்றங்கள் பதவி உயர்வு, சேவை நீடிப்புக்கள் என்பவற்றிற்கு எதிராக எதிர்வரும் 19 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக தேசிய கல்விச் சேவைகள் தொழிற்சங்க சம்மேளனத்தின் செயலாளர் பிரேமசார சமரதுங்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துக் கூறுகையில்,

மாகாணசபை அதிகாரிகள் சிலரின் இத்தகைய செயலால் ஆசிரியர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன், இதற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும் என கூறும் வகையில்ஆர்ப்பாட்டம் நடத்தப் படவுள்ளது. சம்மேளனத்தினால்தயாரிக்கப்பட்ட மகஜர்கள் மாகாண சபை ஆளுநர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பில் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (உ-10)

# சுயநிர்ணய உரிமை பற்றி இருநாள் ஆய்வுப் பட்டறை

(தென்மராட்சி)

முரண்பாட்டுக்கற்கை நெறிகளுக்கான பேர்கோவ்பவுண்டேசன் நிறவனத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் பண்டத்தரிப்பு தியானநிலைய மண்டபத்தில் சுயநிர்ணய உரிமையும் அதிகாரப் பகிர்வும் எனும் தலைப்பிலான இருநாள் ஆய்வுப்பட்டறை நடைபெறவுள்ளது.

இவ்ஆய்வுப்பட்டறையில் பங்கு கொள்ளும் பொருட்டு ஹொங் ஹொங் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் யாஸ் ஹாஸ், கலாநிதி ஹெலனாவால் ஆகியோர் இங்கு வருகைதரவுள்ளனர்.

நீதிக்கும் சமாதானத்துக்கு மான ஆணைக்குழுவின் தலைவர் வண.பிதா ஏ.ஜ.பேர்னாட் தலைமையில் நடைபெறவுள்ள இவ் ஆய்வுப் பட்டறையில்துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், யாழ். ஆயர். தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, எஸ். பரமநாதன் உட்பட வேறும் பலர் பங்கு கொள்ளவுள்ளனர். (உ-77)

## திசைரி தியானம்

கடமை

எப்பொழுதும் உண்மையைப் பின்பற்று. நினைவிலும் சொல்லிலும் செய்கையிலும் அதனை அடைய முயற்சி செய். எந்தத் துன்பத்திலும் தைரியமாக இரு. ஆண்டவனிடம் சரணம் அடை.

உன்னுடைய கொள்கைகள், குறிக்கோள்கள் இவற்றில் உறுதியுடன் இரு. பலனை எதிர்பாராது உன் கடமையைச் செய். இறைவன் உனக்கு அருள் புரிவார்.

நீ யார் என்பதை அறிந்து எல்லாப் பற்றுதல்களையும் அறுத்தெறிந்து, கடமைகளைச் செய்து கொண்டிருந்தால் நீ காலாதீதனாகவும், காலனுக்கு காலனாகவும் ஆகிவிடுவாய்.

**சுவாமி சிவானந்தர்**

## வடக்கு-கிழக்கில்
# மரமுந்திரிகைச்செய்கைக்கு திறைசேரி நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண மரமுந்திரிகைச்செய்கை அபிவிருத்திக்கென திறைசேரி நிதி ஒதுக்கியுள் ளது.

இதற்கமைய மட்டக்களப்பில் மாங்கேணியிலும், திருகோணமலையில் திரியாயிலும், மன்னாரில் கொண்டச்சியிலும் மரமுந்திரிகைத் தோட்டங்கள் அமைக்கப்படவுள் ளன.

மட்டக்களப்பில் மரமுந்திரிகைச் செய்கைக்கென 90 இலட்சம் ரூபாவும், மன்னாருக்கு 3 கோடி 60 இலட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ் மரமுந்திரிகைச் செய்கைத் திட்டம் அடுத்தமாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது. (உ-8)

## பல்கலைக்கழக ஊழியரின் வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியா சங்கத்தின் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று திட்டமிட்டபடி ஆரம்பமாகியது.

தமது கோரிக்கைகள் நிறை வேற்றப்படும் வரை போராட்டம் தொடாச்சியாக நடைபெறும் என்று ஊழியர் சங்கம் அறிவித் துள்ளது.

இதே வேளை போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் யாழ்.பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியா கோபாலகிருஷ்ணஐயர்,பட்டப் படிப்புக்கள் பீடாதிபதி பேரா சிரியர்சி.க.சிற்றம்பலம் மற்றும் பதில் பதிவாளர் ஆகியோர் ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியுள்ளனர். (உ)

## கணனி கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் கணனி எக்ஸ்பிரஸ் நடத்திய கணனி தொடர்பான கருத்தமர்வு நேற்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெற்றது.

தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் கோட்டக் கல்வி அதிகாரி இ.சீவஞானசுந்தரம், பாடசாலை அதிபர்ந.சிவகடாட்சம் மற்றும் ஆசிரியர்கள் கோப்பாய் கோட்ட மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

கருத்தமர்வைத் தொடர்ந்து சான் றிதழ்களும் வழங்கப்பட்டன. (த-5)

## வரவேற்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர்தொழில் நுட்ப நிறுவன முதலாம் வருட மாணவர் களை வரவேற்கும் நிகழ்வு நாளை முற்பகல் 10 மணிக்கு தலைவர் றொபின் ஜெயரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ரீ.இராஜரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார்.(இ-5)

## பெற்றோர்கள் மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் சி.ஞானேஸ் வரன் இடம்மாற்றப்பட்டு புதிதாக பெண்அதிபர் ஒருவர் நியமிக் கப்பட்டதைக் கண்டித்து மாணவா களின் பெற்றோர்கள் நேற்றுக் காலை பாடசாலையின் வாசல் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். (த-37)

## ஸ்ரீ.சு.கட்சி

தேவை இப்போது ஏற்பட்டுள்ளது. அந்த உடன் படிக்கையை கட்சியின் உயர்பீடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் கூடி ஆராயவுள்ளது. இவ் வுடன் படிக்கையை கட்சி விரிவாக ஆராய்ந்த பின் ஜே.வி.பியின் பார்வைக்கு சமர்பபிக்கப்பட வுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க,பொது ஜன ஐக்கிய முன்னணியில் இணைந்துள்ள கட்சிகளினால் இம் மாதம் 10ம் திகதி தலை நகர் கொழும்பில் நடத்தப்படவுள்ள ஆர்ப்பாட்ட ஊர்வலத்திலும் கண்டனப் பொதுக் கூட்டத்திலும் கலந்து கொள்ளுமாறு ஜே.வி.பி மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை 10ம் திகதி நடைபெறவுள்ள பொதுக் கூட்டத் திற்கும் ஊர்வலத்திற்கும் பொலிஸார் நேற்று வரை அனுமதி வழங்கவில்லை என்றும் பொலிஸ் அனுமதி கிடைத்தால என்ன கிடைக்காவிட்டால் என்ன திட்டமிட்டபடி நாடு தழுவிய ரீதியில் லட்சக்கணக்கான மக்களை ஒன்று திரட்டி வீதியில் இறங்கி போராட்டம் நடத்தப் போவதாக முன்னாள் அமைச்சர் அலவி மௌலானா எமது நிருபரிடம் தெரிவித்துள்ளார். (ம)

## மெய்வல்லுநர் போட்டி

(மண்கும்பான்)

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் அதிபர் அருட் செல்வி யோளன்ட் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள நிர்வாக இயக்குநர் எ.எ. மில்ரன் அமரசிங்க பிரதம விருந்தினராகவும் கொழும்புத் துறை குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்திரு. போல் நட்சத்திரம் அடிகளார் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.(த-55)

## கண்காணிப்பு....

சு.ப. தமிழ்ச்செல்வன் உடன் இருப்பார்கள் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக பதவியில் இருந்து விலகிப்போகும கண்காணிப்புகுழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்பியுறு ஹெவ்டேயுக்கும் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்குமிடையே இடம்பெற்ற காட்டமான கடிதப்பரிமாற்றத்தை அடுத்து தலைவர் பிரபாவுடன் இடம்பெறும இச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது (ம)


### தேவை

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் இயங்கும விக்னா ஹோட்டலுக்கு (சாப்பாட்டுக் கடை) வேலை யாட்கள் தேவை நேரில் தொடர்பு கொள்ளவும்.சம்பளம்நேரில பேசித் தீர்மானிக்கப்படும்.

(6588)


## திரைப்பட வழங்குநர் சங்கம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மகாவித்தியாலய வீதியில் அமைந்துள்ள திரைப்பட வழங்குநர் சங்கம் நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டுள்ளது.

சங்கத்தலைவர் பேபி மாஸ்ரர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கரவெட்டி தேவாலய பங்குத்தந்தை அருட்திரு. ஜோன் பற்றீஸ் அன்ரனி பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார். (த)

## புலிகள்...

முடிப்பதாயின் அரசாங்கத்திற்கும விடுதலைப்புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வை மேலும் மேலும் இறுக்கமாக்கி கொள்வதே ஒரே வழி ,யுத்தத்தினால் வடக்குக் கிழககு நிர்வாக கட்டமைப்பு முற்றாகச் செயலிழநது உள்ளது.

இதனை மிக குறுகிய கால இடைவெளியில் சீர் செய்ய முடியாது ஆயினும் வெகு விரைவாக வடக்குக்கிழக்கை வழமைக்குக்கொண்டு வருவோம் இதற்கான சகல நட வடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பிரதமர் மேலும் கூறியுள்ளார்.(த)


### VACANCY

**HIV/AIDS Awareness Programme Co-ordinator**

Vacancy exists for a post of Co- ordinator(male)at The Refugees Rehabilitation organisation (TRRO Ltd) Jaffna

| | |
|---|---|
| Qualifications | : science Graduate |
| Age | : 35 Years or below |
| Essential skills | : Good communication ability |
| | : Good Knowledge in English |
| | : Computer Knowledge |
| | : Community oriented works |
| | : Experience is Social work |
| | : Analyse outcome of projects and out puts |
| Closing date | : 10th March 2003 |

Applications Should be addressed to : The chairman
TRRO Ltd,
106.4th Cross Street
J affna.

(6594)



எக்காளத் தொனி

# மாபெரும் எழுப்புதல் கூட்டங்கள்

கடைசி இரு தினங்கள்

வெற்றி நிச்சயம்

விடுதலை சத்தியம்

- நோயினால் வருந்துபவர்களே!
- சமாதானம் இன்றி வாடுபவர்களே!
- பில்லி சூனியக் கட்டில் அகப்பட்டுள்ளவர்களே!

குடும்பமாக வாருங்கள் இலவசமாக விடுதலை பெறுவீர்கள்



பாஸ்டர் மேவின் குணசெல்வம்
ஸ்தாபகர் ~ நிர்வாகி
எக்காளத் தொனி ~
இலங்கை

தொடர்புகளுக்கு: "எக்காளத் தொனி" 021-222-3632

காலம் 2003 பெப்ரவரி 28 முதல் மார்ச் 5ஆம் திகதி வரை.



பாஸ்டர் ஸ்ரீபன் தங்கராஜா
ஜேர்மன்

நேரம் தினமும் மாலை 4.30 மணி முதல் இரவு 8.00 மணிவரை.



பாஸ்டர்
இயன் கிறிஸ்ரென்சன்
லண்டன்,
இங்கிலாந்து.

இடம்
துரையப்பா விளையாட்டு அரங்கு,
யாழ்ப்பாணம்.

விசுவாசிகளுக்கான வேதப்படிப்பு
யாழ்.எக்காளத் தொனி சபையில்
28.02.2003 முதல் தினமும்காலை 9.30 மணி தொடக்கம்.

## நடந்து முடிந்த கூட்டங்களில் நிகழ்ந்த அற்புதங்கள்



பல மாதங்களாக கழுத்து திருப்ப முடியா திருந்தவர் ஜெபத்தின் பின் பூரண சுகம் பெற்றார்.



தொண்டையில் கட்டியோடு வந்தவர் ஜெபத்தின் பின்பு கட்டி மறைந்த அற்புதக் காட்சி.



வயிற்றில் நடைபெற்ற சத்திர சிகிச்சையின் பின்பும் பயங்கரமான வயிற்று வலியால் தவித்தவர் ஜெபத்தின் போது குணமாக்கப்பட்டார்.



ஜெபத்தின் போது நோயைக் குறிப்பிட்டு ஜெபித்த போது காலில் இருந்த நீண்ட கால வியாதியில் இருந்து சுகம் பெற்றார்.

(C/6587)

யாவரும் வாருங்கள். . . தெய்வ அருளால் விடுதலை பெறுவீர்கள்.